தமிழியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

JOURNAL OF TAMIL STUDIES

DECEMBER 2009

76

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

Board of Governors

DECEMBER 2009

CHAIRMAN

Dr. M. KARUNANIDHI

Hon'ble Chief Minister, Govt. of Tamil Nadu

VICE-CHAIRMEN

Dr. V.C. KULANDAISWAMY
Former Vice-Chancellor, Indira Gandhi National Open University, New Delhi.

Vice-Chancellor
University of Madras, Chennai.

Vice-Chancellor
Annamalai University, Annamalai Nagar.

Vice-Chancellor
Madurai Kamaraj University, Madurai.

Vice-Chancellor
Tamil University, Thanjavur.

MEMBERS

Dr. F. GROS
Former Director, French Institute of Indology, Pondicherry (IATR-Representative).

DIRECTOR
Central Institute of Indian Languages, Mysore.

SECRETARY TO GOVERNMENT
Tamil Development, Endowment and Information Department, Govt. of Tamil Nadu.

SECRETARY TO GOVERNMENT
Finance Department, Govt. of Tamil Nadu.

MEMBER SECRETARY

Dr. K.A. Gunasekaran
Director, International Institute of Tamil Studies, Chennai.

தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

76

DECEMBER 2009

Articles in the Journal of Tamil Studies do not necessarily represent either the views of the International Institute of Tamil Studies or those of the Board of Editors

BOARD OF EDITORS

Dr. F. GROS
Former Director, French Institute of Indology, Pondicherry.

Dr. G.L. HART
Dept. of South and South East Asian Studies, University of California, U.S.A.

Dr. A. VELUPILLAI
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

Dr. S.N. KANDASAMY
Former Professor of Tamil, Tamil University, Thanjavur.

Dr. Pon. KOTHANDARAMAN
Former Vice-Chancellor, University of Madras, Chennai.

Editor-in-Chief
Dr. K. A. Gunasekaran

Associate Editor
Dr. D. Renganathan

OUR CONTRIBUTORS

Dr. R. Kothandaraman	Fellow Central Institute of Classical Tamil Kamarajar Salai, Chennai-600 05
Dr. Seethalakshmi	Assistant Professor Asian Language of Culture National Institute of Education Singapore
Dr. K. Thamizh Azhagan	Assistant Professor Department of Tamil A.V.A. College Mannampandal Mayiladuthurai
Dr. A. Pandurangam	Professor of Tamil (Retd.) Pondicherry University Puducherry
Sukumar Rajagopal	Associate Indus Research Centre Roja Muthiah Research Library Chennai-600 113
Priya Raju & Sridhar Narayanan	Software Engineers Lords Apartments No. 4C, Sathyadev Avenue MRC Nagar, Chennai-600 028
Dr. Iravatham Mahadevan	Honarary Consultant Indus Research Centre Roja Muthiah Research Library Chennai-600 113

CONTENTS

1.	வாக்கியச் சாரியைகள்	இரா. கோதண்டராமன்	1
2.	தமிழ்மொழி கற்பித்தலில் மொழி சார்ந்த அணுகுமுறைகள்	சீதாலட்சுமி	15
3.	தமிழரின் அறிவியல் சிந்தனையில் வானவியல்	க. தமிழ் அழகன்	47
4.	Dating of Cankam Literature - A Reappraisal	A. PANDURANGAN	57
5.	Illiterate Indus?	SUKUMAR RAJAGOPAL, PRIYA RAJU & SRIDHAR NARAYANAN	69
6.	Meluhha and Agastya: Alpha and Omega of the Indus Script	IRAVATHAM MAHADEVAN	89
	நூல் மதிப்புரை		111

வாக்கியச் சாரியைகள்

இரா. கோதண்டராமன்

1.0 வாக்கியச் சாரியைகளின் வகைகள்

1.1 பயனிலையாகச் செயல்படும் முற்றுவினையின் வடிவம் சிதையாமல் ஒரு முற்று வாக்கியம் வினையடை வாக்கியமாகவோ (Adverbial Clause), பெயரடை வாக்கியமாகவோ (Relative/Adjectival Clause), பெயர்த்தொடர் வாக்கியமாகவோ (Nominal Clause) செயல்படுதல் தமிழிலும் பிற திராவிட மொழிகளிலும் இயல்பாகக் காணப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். இத்தகைய மாற்றத்தை நிகழ்த்துவது என/என்று, என்ற/என்னும், என்பது முதலான வாக்கியச் சாரியைகள் (Sentential Complementizers) ஆகும். ஆங்கிலத்தில் இந்த மூவகைச் சாரியைகளையும் குறிக்க that என்ற சொல் ஒன்றே பயன்படுத்தப்படுகிறது. எ.டு. John said that Mary was there; The news that the minister attended the function; It is true that John loved Mary. தமிழில் வாக்கியச் சாரியைகள் தெரிநிலை வினையமைப்புகளைப்போல் தோன்றினாலும் அவற்றைத் தெரிநிலை வினைகளைப்போல் பகுப்பாய்வு செய்யமுடியாது. எடுத்துக்காட்டாக ***என்று, என்ற, என்னும், என்பது*** ஆகிய வாக்கியச் சாரியைகளைத் ***தின்று, தின்ற, தின்னும், தின்பது*** ஆகியவற்றைப்போல் அமைப்பாய்வு செய்யமுடியாது. மேலே குறிப்பிட்ட வாக்கியச் சாரியைகள் வரலாற்று நிலையில் ***என்*** என்னும் இருப்பு வினையோடு (Be Verb) தொடர்புள்ளவையாகும். வண்ணனை நிலையில் இந்த வாக்கியச் சாரியைகளை ***என்*** என்பதன் மாற்றுருபுகளாகக் கொள்ளலாம்.

1.2 சொல்லுதல் என்னும் பொருண்மைக்குரிய ***என்*** என்பதும் இருத்தல் என்னும் பொருண்மைக்குரிய ***என்*** என்பதும் முற்றிலும் மாறுபட்ட வினைகளாகும். இருத்தற் பொருண்மையை உணர்த்தும் ***என்*** என்பது வழக்கற்றுப் போனதால்

சொல்லுதற் பொருண்மையைக் குறிக்கும் ***என்*** என்ற வினையின் திரிபாகவே வாக்கியச் சாரியைகள் ஆய்வறிஞர்களால் (Arden 1976:252, Jules Bloch 1954:117&118, Bh.Krishnamurti 1969:322, M.Israel 1979:220, B.R.K.Reddi 1980:83, S.Sivakumar 1981:431, P.S. Subrahmanyam 2008: 311) கருதப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதன் தாக்கத்தை இந்தோ-ஆரிய மொழிகளிலும் காணலாம். வங்க மொழியில் bole என்பதும் ஒரிய மொழியில் boli என்பதும் மராத்தி மொழியில் மணுன் (mhaṇun) என்பதும் சௌராட்டிர மொழியில் ***மெணி*** என்பதும் நேபாளி மொழியில் bhani என்பதும் ***என்று*** என்னும் வாக்கியச் சாரியைக்கு நிகரானவையாகும். ஆனால் இந்தச் சாரியைகள் அனைத்தும் சொல்லுதல் என்னும் வினையின் தாக்கத்தால் தோன்றியவையாகும். இதனைத் திராவிடத் தாக்கமாகக் கருத வாய்ப்புள்ளது. ஏனெனில் திராவிடக் குடும்பத்திலேயே சொல்லுதல் என்னும் வினையானது வாக்கியச் சாரியையாக நிகழும் நிலை காணப்படுகிறது. கன்னடக் கிளைமொழிகளுள் ஒன்றாகிய ஹவ்யக கன்னடத்தில் ***ஹேளு*** என்பது சொல்லுதல் என்னும் பொருண்மைக் குரிய வினையாகும். இந்த மொழியில் ***ஹேளி*** என்பதும் ***ஹேளுவ*** என்பதும் முறையே ***என்று, என்ற*** வாக்கியச் சாரியைகளைக் குறிப்பனவாகும்.

1.3 *சொல்லுதல், இருத்தல்* ஆகிய பொருண்மையைக் குறிக்கும் ***என்*** என்ற இருவகை வினைகளுள் இருப்புப் பொருண்மையை உணர்த்தும் ***என்*** என்பதே பொருண்மை திரிந்தும், கெட்டும் இலக்கண உருபன்களாகவும், சாரியைகளாகவும் நிகழ்வதாகும். ***சொல்லுதல்*** என்னும் பொருண்மையை உணர்த்தும் ***என்*** என்ற வினைத்திரிபு வடிவங்களின்முன் ***என்று/என*** ஆகிய வாக்கியச் சாரியைகள் நிகழ்வதில்லை. எடுத்துக்காட்டாக, ****முருகன் வந்தான் என்று என்றேன்*** என்ற வாக்கியம் ஏற்புடையதன்று. மாறாக, ***முருகன் வந்தான் என்று சொன்னேன்*** என்ற வாக்கியம் ஏற்புடையதாகும். ***என்றேன்*** என்பதன்முன் ***என்று*** என்ற வாக்கியச் சாரியையின் நிகழ்ச்சி தவிர்க்கப் படுகிறது. தெலுங்கில் இத்தகைய கட்டுப்பாடு இல்லை. கருதுக: ***ராமுடு நின்ன வச்சினாடு அனி அன்னானு*** '*ராமன் நேற்று வந்தான் என்று என்றேன்'.

இன்னொரு கட்டுப்பாடும் தமிழில் காணப்படுகிறது. *முருகன் வந்தான் என்றேன் நான்* என்ற வாக்கியத்தில் *நான்* என்னும் எழுவாய் ஈற்றில் நிகழ்வதைக் காணலாம். இந்த எழுவாயானது *என்றேன்* என்ற பயனிலையின் முன் நிகழாது. எனவே **முருகன் வந்தான் நான் என்றேன்* என்ற வாக்கியம் ஏற்புடையதன்று. இந்தக் குறிப்புகளுடன் தமிழில் வாக்கியச் சாரியைகளின் நிகழ்ச்சியைப் பற்றி இனி ஆராயலாம். தமிழ் வாக்கியச் சாரியைகள் வினையடைச் சாரியைகள் (Adverbial Complementizers) என்றும் பெயரடைச் சாரியைகள் என்றும் (Relative/Adjectival Complementizers) பெயர்த்தொடர்ச் சாரியைகள் என்றும் (Nominal Complementizers) மூவகைப்படும்.

2.0 வினையடைச் சாரியைகள்

2.1 *என, என்று, ஆக, போல்* ஆகிய நான்கும் வினையடைச் சாரியைகளாகும். இவற்றுள் *என, என்று* ஆகிய இரண்டும் சிறப்பு வினைமுற்றுப் பயனிலைகளை அடுத்தும் எதிர்மறை வினைமுற்றுக்களை அடுத்தும் நுண்பொருள் வினைகளாகிய செய்யலாம், செய்யவேண்டும், செய்யக்கூடும், செய்யவேண்டாம், செய்யக்கூடாது முதலான வாய்பாட்டு வினைகளை அடுத்தும் நிகழ்வனவாகும். இந்தச் சாரியைகள் தெலுங்கில் *அனி* என்றும் கன்னடத்தில் *எந்து* என்றும் மலயாளத்தில் *எந்நு* என்றும் வழங்குகின்றன. இவையனைத்தும் *என்* என்ற வினையோடு பிறப்பியல் தொடர்புடையவையாகும்.

2.2 எஞ்சிய வினையடைச் சாரியைகளாகிய *ஆக, போல்* ஆகியவை பொது வினைமுற்றுப் பயனிலைகளை அடுத்து நிகழ்வனவாகும். இந்த இரண்டனுள் *ஆக* என்பது *செய்தது, செய்வது* ஆகிய வாய்பாட்டுப் பொது வினைமுற்றுக்களை அடுத்தும் *போல்* என்பது *செய்தால்* வாய்பாட்டுப் பொது வினைமுற்றுக்களை அடுத்தும், நிகழும் பெற்றியனவாகும். பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் வினையடைச் சாரியைகளின் நிகழ்ச்சியைக் காணலாம்.

1(1) [அமைச்சர் வந்தார் என / என்று] கேள்விப்பட்டேன்

(2) [அமைச்சர் நாளை வருவார் என / என்று] கேள்விப்பட்டேன்

(3) [அமைச்சர் அங்கே இல்லை என / என்று] கேள்விப்பட்டேன்

(4) [அமைச்சர் இங்கே வரவில்லை என / என்று] கேள்விப்பட்டேன்

(5) [அமைச்சர் நாளை இங்கே வரமாட்டார் என / என்று] கேள்விப்பட்டேன்

2. [அமைச்சர் வந்ததாகக்] கேள்விப்பட்டேன்

3. [அமைச்சர் நாளை வருவதாகக்] கேள்விப்பட்டேன்

4. [அமைச்சர் வந்தாற் போல்] கேள்விப்பட்டேன்

இந்த எடுத்துக்காட்டுக்களில் பகர அடைப்புக்குள் உள்ள வினையடை வாக்கியங்களில் நிகழும் ***வந்தார், வருவார், வரமாட்டார்*** ஆகியவை சிறப்பு வினைமுற்றுக்களாகவும் ***வந்தது, வருவது, வந்தால், இல்லை, வரவில்லை*** ஆகியவை பொது வினைமுற்றுக்களாகவும் கருதத்தக்கவையாகும். சிறப்பு வினைமுற்று என்பது அதன் எழுவாயோடு இசைந்து நிகழும். ***வந்தார், வருவார், வரமாட்டார்*** ஆகிய உயர்வொருமை வினைமுற்றுக்கள் அமைச்சர் என்ற உயர்வொருமை எழுவாய்க்கு இசைவாக நிகழ்வதைக் காணலாம். ***வந்தது, வருவது, வந்தால், இல்லை, வரவில்லை*** ஆகியவை எழுவாயாக நிகழும் மூவிடப் பெயர்களுக்கும் பொதுவான பயனிலை வினைகளாக நிகழும். ***வந்தது, வருவது*** ஆகிய பொது வினைமுற்றுக்கள் ***ஆக*** என்னும் வினையடைச் சாரியையின் முன்பும் ***வந்தால் என்னும்*** பொது வினைமுற்றானது ***போல்*** என்னும் வினையடைச் சாரியையின் முன்பும் நிகழ்வதைக் காணலாம். ***வந்தது, வருவது*** ஆகிய ***செய்தது, செய்வது*** வாய்பாட்டுப் பொது வினைமுற்றுக்களில் நிகழும் அதுவென் கிளவி முற்றுவினைச் சாரியை அல்லது முற்றுச்சாரியை எனக்கொள்ளப்படும். இதில் நிகழும் துகரக்கிளவியை ஒன்றன்பால் விகுதியாகக் கருத முடியாது.

2.3 *[அமைச்சர் வந்தார் என்று] நான் கேள்விப்பட்டேன்* என்ற முற்றெச்ச வாக்கியத்தில் நான் கேள்விப்பட்டேன் என்பது முற்று வாக்கியமாகும். *[அமைச்சர் வந்தார் என்று]* என்பது வினையடை வாக்கியமாகும். இந்த வாக்கியம் எச்ச வாக்கியமாகக் குறிக்கப்படும். *என, என்று* ஆகிய வினையடைச் சாரியைகளை ஏற்று நிகழும் எச்ச வாக்கியங்கள் முற்று வாக்கியங்கள் இன்றியும் நிகழ்வதுண்டு. அவ்வாறு நிகழ்கையில் *என, என்று* ஆகிய சாரியைகள் *ஆம்* என மாறியமையும். எ.டு. *அமைச்சர் நேற்று வந்தாராம்.* இத்தகைய வாக்கியமைப்புகள் முற்று வாக்கியங்களை இழந்தவை யாகும். *என, என்று* ஆகியவையும் *ஆம்* என்பதும் துணை நிலை வழக்கில் அமைந்த வினையடை வாக்கியச் சாரியைகளாகும்.

2.4 வினையடைச் சாரியையை ஏற்று நிகழும் வினையடை வாக்கியங்களின் எழுவாய் செயப்படுபொருளாகவும் ஏற்றம் பெற்று நிகழ்வதுண்டு. முதன்மை வாக்கியத்தின் (Main Clause) பயனிலையானது செயப்படுபொருள் குன்றாவினையாக நிகழ்கையில் தனக்கென ஒரு செயப்படுப் பொருளை வேண்டுவதால் இந்த வாக்கியத்தின் எழுவாய் செயப்படுபொருளாக ஏற்றம் பெறுகிறது. இத்தகைய மாற்றம் நிகழ்கிறது. *[முருகன் வள்ளியின் கணவன் என்று] தமிழர்கள் கருதுகின்றனர்* என்ற வாக்கியத்தில் *முருகன்* என்ற உறுப்பு எழுவாயாகவும் *[முருகனை வள்ளியின் கணவன் என்று] தமிழர்கள் கருதுகின்றனர்* என்ற வாக்கியத்தில் அந்த உறுப்பு செயப்படு பொருளாகவும் நிகழ்வதைக் காணலாம். பழந்தமிழில் வினையடை வாக்கியத்தின் பயனிலை வினைமுற்றாக இருந்தாலும் அதன் எழுவாய் செயப்படுபொருளாக மாறி அமையும் நிலை காணப்படுகிறது. *மலைகெழு நாடனை வரூஉம் என்றோளே* (குறு.201.7) என்ற வாக்கியத்தில் *மலைகெழு நாடன்* என்ற எழுவாய் செயப்படுபொருளாக மாறி நிகழ்வதைக் காணலாம். *நான் [முருகனை அங்கே இல்லை என்று] சொன்னேன்* என்பது போன்ற வாக்கியங்கள் இக்காலத் தமிழில் வழங்குவதில்லையென்றாலும் நான் *[முருகனைத்தான் அங்கே இல்லை என்று] சொன்னேன்* என்பது போன்ற

வாக்கிய வகைகள் ஏற்புடையனவாகக் கொள்ளப்படும். இத்தகைய வாக்கிய வகைகள் நான் *[முருகன் தான் அங்கே இல்லை என்று]* சொன்னேன் என்பது போன்ற வாக்கிய வகைகளின் திரிபுகளாகும்.

2.5 வினையடைச் சாரியை நிகழும் வாக்கியத்தில் காணப்படும் எழுவாய் செயப்படுபொருளாக ஏற்றம் பெறும் நிகழ்ச்சி மேலே குறிப்பிடப்பட்டது. இத்தகைய நிகழ்ச்சியைப் பின்வரும் வாக்கிய அமைப்புகளிலும் காணலாம்.

5(1) நான்{உன்னை, உங்களை, அவனை, அவளை, அவரை}ப் பாடச் சொன்னேன்

(2) [நீ, நீங்கள், அவன், அவள், அவர்] என்னைப் பாடச் சொன்னாய், சொன்னீர்கள், சொன்னான், சொன்னாள், சொன்னார்

6(1) நான் {உன்னை, உங்களை, அவனை, அவளை, அவரை}ப் பாடும்படி சொன்னேன்

(2) [நீ, நீங்கள், அவன், அவள், அவர்] என்னைப் பாடும்படி [சொன்னாய், சொன்னீர்கள், சொன்னான், சொன்னாள், சொன்னார்]

(3) [நீ, நீங்கள், அவன், அவள், அவர்] என்னைப் பாடுமாறு [சொன்னாய், சொன்னீர்கள், சொன்னான், சொன்னாள், சொன்னார்]

7(1) நான் [உன்னை, உங்களை, அவனை, அவளை, அவரைப் பாடுமாறு சொன்னேன்]

(2) [நீ, நீங்கள், அவன், அவள், அவர்] என்னைப் பாடும்படி [சொன்னாய், சொன்னீர்கள், சொன்னான், சொன்னாள், சொன்னார்]

(3) [நீ, நீங்கள், அவன், அவள், அவர்] என்னைப் பாடுமாறு [சொன்னாய், சொன்னீர்கள், சொன்னான், சொன்னாள், சொன்னார்]

இந்த எடுத்துக்காட்டுக்களில் பயனிலையாக நிகழும் செயவென் வாய்பாட்டு வினையில் வாக்கியச் சாரியையைச் சுட்ட முடியவில்லை. வண்ணனை ஆய்வில் அதனைப் புணர்ந்து கெட்டதாகக் கொள்ளலாம். ஆனால் இது வரலாற்று

உண்மையைத் தெளிவுபடுத்துவதாகக் கொள்ளமுடியாது. *பாடச் சொன்னேன்* என்பதில் *பாட* என்பதன் எதிர்மறை *பாட வேண்டாம் என்று* அமையும். இதனின்றும் *பாடச்சொல்* என்பதில் நிகழும் *பாட* என்பதைப் பொது வினைமுற்றாகவும் அதில் நிகழும் அகர விகுதியை வேண்டும் என்ற பொருண்மையை உணர்த்தும் வாக்கியச் சாரியையாகவும் கொள்ளலாம். *செய்யும்படி, செய்யுமாறு* ஆகிய வாய்பாட்டுத் தொடர்களில் நிகழும் *படி, ஆறு* ஆகிய இடைச்சொற்கள் வினையடைச் சாரியைகளாக நிகழ்கின்றன. இந்தச் சாரியைகள் நிகழும் வாக்கியத்தில் காணப்படும் எழுவாயானது செயப்படு பொருளாக ஏற்றம் பெறுவதைக் காணலாம். இவ்வாறு ஏற்றம் பெறும் எழுவாயின் பயனிலை வினையானது செய்யும் வாய்பாட்டினதாக நிகழ்கின்றது. இந்த வாய்பாட்டு வினையானது செய்யவேண்டும் என்ற பொருண்மையை உணர்த்து வதாகத் தோன்றுகிறது. *செய்யும்படி, செய்யுமாறு* ஆகியவற்றின் எதிர்மறை *செய்யவேண்டாம் என்று* அமையும். இங்கே *என்று* என்பதும் *படி, ஆறு* ஆகியவையும் துணை நிலை வழக்கில் நிகழ்வதால் பிந்திய இடைச் சொற்கள் வினையடை வாக்கியச் சாரியைகளாகக் கொள்ளத்தக்கவையாகின்றன.

2.6 *நான் [அவனைப் பாடும்படி] சொன்னேன்* என்ற வாக்கியத்தில் *பாடும்படி* என்பதில் நிகழும் *படி* என்பது ஒரு வினையடை வாக்கியச் சாரியை யாகும். இந்தச் சாரியையும் *என்று* என்பதும் துணை நிலை வழக்கினவாகும். ஆனால் தெலுங்கில் *அனி* என்ற வினையடைச் சாரியை தமிழில் *என்று, படி* ஆகிய சாரியைகள் நிகழும் இடங்களில் நிகழவல்லதாகும். *பாடுமனி செப்பு (= பாடச்சொல்)* என்ற வாக்கியம் *பாடும்படி சொல்* என்ற தமிழ் வாக்கியத்திற்கு இணையானதாகும். தெலுங்கில் நிகழும் *அனி* என்பதற்கு இணையாகத் தமிழில் *படி* என்பதன் நிகழ்ச்சி காணப்படுகிறது. இதனின்றும் *படி* என்பது ஒரு வாக்கியச் சாரியை என்ற உண்மை பெறப்படுகின்றது.

2.7 வினையடைச் சாரியைகளாக இங்கே குறிக்கப்பட்டுள்ள *என, என்று* ஆகியவை தொல்காப்பிய ஆய்வில் இடைச்சொற்களாகக் கருதப்படு கின்றன. தொல்காப்பியம் இந்த இடைச்சொற்களின் நிகழ்ச்சியை ஆறு வகையாகக் கொள்கிறது. பின்வரும் நூற்பாக்கள் இதனை உணர்த்தும்.

8. வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரொடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி (தொல்.சொல்.சேனா.258)

9. என்றென் கிளவியும் அதனோ ரற்றே (தொல்.சொல்.சேனா.259)

சேனாவரையர் பின்வரும் எடுத்துக்காட்டுக்களை இந்த நூற்பாக்களுக்கு உரியனவாகக் கருதுவார்.

10(1) வினை : மலைவான் கொள்கென உயர்பலி தூஉய் (புறம்.143)
நரை வரும் என்றெண்ணி (நாலடி.11)

(2) குறிப்பு : துண்ணெனத் துடித்தது மனம்
விண்ணென்று விசைத்தது

(3) இசை : ஒல்லென வொலித்தது
ஒல்லென் றொலிக்கும் ஒலி புனல் ஊரற்கு (ஐங்.ஐம்.50.28)

(4) பண்பு : வெள்ளென விளர்த்தது
பச்சென்று பசத்தது

(5) எண் : நிலனென நீரெனத் தீயென வளியென
நிலனென்று நீரென்று தீயென்று

(6) பெயர் : அழுக்காறு என ஒரு பாவி (குறள்.168)
பாரியென்று ஒருவனும் உளன்

மேலே குறிப்பிட்ட தொல்காப்பிய ஆய்வில் வினை என்ற பிரிவின்கீழ் வினையடைச் சாரியைகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ***மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்*** என்ற சேனாவரையரின் எடுத்துக்காட்டில் ***என*** என்பதை வாக்கியச் சாரியையாகக் கொள்ளமுடியாது. இதன்முன் ***என்று*** என்னும் வாக்கியச் சாரியை புணர்ந்து கெட்டது என்பதே உண்மை. ஏனைய பிரிவுகளின்கீழ்க் குறிக்கப்பெற்றுள்ள ***என, என்று*** ஆகிய இடைச்சொற்களை வினையடைச் சாரியைகளாகக் கொள்ளமுடியாது.

3.0 பெயரடைச் சாரியைகள்

3.1 *என்ற, ஆகிய, என்னும்* மூன்றும் பெயரடைச் சாரியைகள் ஆகும். இவை தெலுங்கில் *அனே* என்றும் கன்னடத்தில் *எம்ப/என்னுவ* என்றும் மலயாளத்தில் *எந்ந* என்றும் வழங்கும். *என்ற, என்னும்* ஆகிய தமிழ்ச் சாரியைகள் சிறப்பு வினைமுற்றுக்கள், எதிர்மறை வினைமுற்றுக்கள் முதலானவற்றை அடுத்து நிகழும். *ஆகிய* என்பது *செய்தது, செய்வது* வாய்பாட்டுப் பொது வினைமுற்றுக்களை அடுத்து நிகழும். இவற்றுள் *என்ற, என்னும்* ஆகியவை உறழ்நிலை வழக்கினவாகும். பெயரடைச் சாரியைகளின் நிகழ்ச்சியைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

11 (1) [அமைச்சர் வந்தார் / வருவார் என்ற] செய்தி

(2) [அமைச்சர் வந்தார் / வருவார் என்னும்] செய்தி

(3) [அமைச்சர் வரமாட்டார் என்ற / என்னும்] செய்தி

(4) [அமைச்சர் அங்கே இல்லை என்ற / என்னும்] செய்தி

12. [அமைச்சர் வந்ததாகிய / வருவதாகிய] செய்தி

இவற்றுள் *வந்ததாகிய* என்பது *வந்த* என்பதனோடும் *வருவதாகிய* என்பது *வரும்* என்பதனோடும் பொருந்துவதைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் புலப்படுத்தும்.

13. [அமைச்சர் வந்த] செய்தி (=அமைச்சர் வந்ததாகிய செய்தி)

14. [அமைச்சர் வரும்] செய்தி (=அமைச்சர் வருவதாகிய செய்தி)

செய்த வாய்பாட்டு வினைகளில் பெயரெச்ச விகுதியாக நிகழும் அகர விகுதியும் *செய்ததாகிய* வாய்பாட்டுத் தொடர்களில் நிகழும் *ஆகிய* என்ற பெயரடைச் சாரியையும் சிறப்பு வினைமுற்றுக்கள், எதிர்மறை வினைமுற்றுக்கள் ஆகியவற்றை அடுத்து நிகழும் *என்ற/என்னும்* பெயரடைச் சாரியைகளும் துணை நிலைவழக்கில் (Complementary Distribution) நிகழ்வனவாகும். இதே

போல் ***என்ற*** என்பதன் முன் நிகழும் சிறப்பு வினைகளும், எதிர்மறை முற்றுவினைகளும் ***ஆகிய*** என்பதன் முன் நிகழும் செய்தது வாய்பாட்டுப் பொது வினைமுற்றும் அகரவிகுதியின் முன் நிகழும் செய்து வாய்பாட்டு வினையுடன் துணை நிலைவழக்கினவாய் நிகழ்வதும் கருத்தில் கொள்ளத் தக்கதாகும். இதனின்றும் செய்து வாய்பாட்டு வினைகளும் செய்தது, செய்வது வாய்பாட்டு வினைகளும் பொது வினைமுற்றுக்களே என்ற உண்மை பெறப்படுகின்றது. இத்தகைய வினைமுற்றுக்கள் வண்ணனை ஆய்வில் வாக்கியச் சூழலால் கட்டுண்ட பொது வினைமுற்றுக்கள் (Syntactically Bound Impersonal Finite Verbs) எனக் கொள்ளப்படும். வரலாற்றுக்கு முந்தைய தொன்மொழியில் ***செய்து*** வாய்பாட்டு இறந்தகால வினைகள் மலயாளத்தில் உள்ளதுபோல் பொது வினைப் பயனிலையாகச் செயல்பட்டிருக்கவேண்டும் என்பதை இந்த ஆய்வு புலப்படுத்துகிறது.

3.2 எடுத்துக்காட்டு (14)–இல் நிகழும் ***செய்யும்*** வாய்பாட்டு வினையாகிய ***வரும்*** என்பதன் நிகழ்ச்சி சிந்தனைக்குரியதாகும். ***வருவதாகிய*** (செய்தி) என்பதில் நிகழும் ***ஆகிய*** என்பதற்கு நிகராக வரும் (செய்தி) என்பதில் எதனைச் சுட்டுவது? ***ஆகிய*** என்பதற்கு நிகராக ***வரும்*** என்பதை அடுத்து ஓர் உறுப்பு நிகழ்ந்து கெட்டது என்பதாக வண்ணனை ஆய்வில் குறிப்பிடலாம். இது உரையாசிரியர்கள் குறிப்பிடும் புணர்ந்து கெடுதல் என்னும் வண்ணனை உத்தியாகும். ஆயினும் ***வரும்*** என்ற வினையமைப்பில் ***ஆகிய*** என்பதற்கு நிகராக ஓர் உறுப்பு இருக்க வேண்டும். அந்த உறுப்பு உம்மைக் கிளவியாகத்தான் இருக்க முடியும். ***அமைச்சர் வரும் செய்தி*** என்பதன் எதிர்மறை ***அமைச்சர் வரமாட்டார் என்ற / என்னும் செய்தி*** என அமையும். எதிர்மறை அமைப்பில் ***என்ற/ என்னும்*** பெயரடை வாக்கியச் சாரியையின் நிகழ்ச்சி காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ***வரும்*** என்பதில் உம்மைக் கிளவி எதிர்வுப் பொருண்மையைக் குறிக்கும் வாக்கியப் பெயரடைக் கிளவியாகக் கருதலாம். இந்த நிலைப்பாடு உம்மைக் கிளவியும் ***ஆகிய*** என்பதும் துணை நிலைவழக்கில் நிகழ்வதை உணர்த்துகின்றது. இத்தகைய வழக்கு நிலையானது ***வருவதாகிய*** என்பதில் நிகழும் ***வருவது*** என்பதும் ***வரும்***

என்பதில் நிகழும் *வர்* என்பதும் துணை நிலைவழக்கின என்ற உண்மையையும் தெளிவுபடுத்துகிறது. *வருவது* என்பதில் *அது* என்பது முற்றுச்சாரியை என்ற செய்தி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே *வருவது* என்பதை **வருவு* என்பதன் மாற்று வடிவமாகக் கொள்ள வாய்ப்புள்ளது. *மெய்புகு வன்ன கைகவர் முயக்கம்* (அகம்.11.10), *வான்தோய் வன்ன குடிமை* (நற்.234.2), *நின்று காண்பன்ன நீண்மலை* (புறம்.211.3), *குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்* (பத்துப்.7.12) ஆகிய எடுத்துக்காட்டுக்களில் நிகழும் *புகுவு* (= புகுவது), *தோய்வு* (= தோய்வது), *காண்பு* (= காண்பது), *குளிர்ப்பு* (= குளிர்ப்பது) ஆகியவை இறவாக்காலப் பொது வினைமுற்றுக்களாகும். இந்த வகையில் *வருவு* என்பதும் இறவாக்காலப் பொது வினைமுற்றாகக் கொள்ளத்தக்கதாகும். *வருவு / வருவது* என்பதும் *வரும்* என்பதில் நிகழும் *வர்* என்பதும் எங்ஙனம் துணை நிலைவழக்கினவாகக் கொள்ளப்படும்? தமிழில் வினைத்தொகையாகிய பெயர்த்தொடர்களில் முதல் உறுப்பு வினைப்பகுதி போல் தோன்றினாலும் (எ.டு. பாய்புனல், காய்கதிர், செல்விருந்து) காலம், புணர்ந்து கெட்டதாகவே, அது கொள்ளப்படும். எனவே மேலே (13)–ஆம் எடுத்துக்காட்டில் நிகழும் *வரும்* என்ற செய்யும் வாய்பாட்டு வினையில் நிகழும் *வர்* என்பதை *வருவு/வருவது* என்பதன் மாற்று வடிவமாகக் கொள்வதில் கோட்பாட்டுச் சிக்கல் ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை.

4.0 பெயர்த்தொடர்ச் சாரியைகள்

4.1 *என்பது, அது* ஆகிய இரண்டும் ஒரு முற்று வாக்கியத்தைப் பெயர்த் தொடர் வாக்கியமாக மாற்றியமைக்கும் வாக்கியச் சாரியைகளாகும். இவை தெலுங்கில் *அனேதி/அன்னதி, அதி* என்றும் கன்னடத்தில் *எம்பது/ என்னுவுது, உது* என்றும் மலயாளத்தில் *எந்நது, அது* என்றும் வழங்கும். வாக்கியத்தில் இவற்றின் நிகழ்ச்சியும் தமிழைப் போன்றதேயாகும். *என்பது* என்னும் தமிழ்ச் சாரியை சிறப்பு வினைமுற்றுக்கள், எதிர்மறை வினை முற்றுக்கள் ஆகியவற்றை அடுத்தும் பெயர்ப் பயனிலையை அடுத்தும் *அது* என்பது **செய்து, செய்பு** வாய்பாட்டுப் பொது வினைமுற்றுக்களை அடுத்தும்

துணை நிலைவழக்கில் நிகழ்வனவாகும். பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் இந்த வகையில் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும்.

15 (1) [அமைச்சர் வந்தார் / வருவார் என்பது] உண்மை

(2) [அமைச்சர் அங்கே இல்லை என்பது] உண்மை

(3) [அமைச்சர் வரமாட்டார் என்பது] உண்மை

(4) [அவர் அமைச்சர் என்பது] உண்மை

16. [அமைச்சர் வந்தது / வருவது] உண்மை

இந்த எடுத்துக்காட்டுக்களில் *வந்தார்* என்பது *வந்து* என்பதனோடும் *வருவார்* என்பது *வருவு* என்பதனோடும் பொருந்தி, துணை நிலைவழக்கில் நிகழ்கின்றன. இவற்றுள் *வருவு* என்பது செய்பு வாய்பாட்டினதாகும். *வருவு, உண்பு, கேட்பு, விற்பு, அளிப்பு* முதலானவை செய்பு வாய்பாட்டினவாகும். சிறப்பு வினைமுற்றுக் களோடு செய்பு வாய்பாட்டு வினைகளும் துணை நிலைவழக்கில் நிகழ்வதால் இவை இறவாக்காலப் பொது வினைமுற்றுக்களாகக் கொள்ளத்தக்கன வாகின்றன. அதேபோல் *அது* என்னும் முற்றுச்சாரியைமுன் நிகழும் செய்து வாய்பாட்டு வினைகளும் பொது வினைமுற்றுக்களாகக் கொள்ளத்தக்கன வாகின்றன.

4.2 *என்று என்பது* ஆகிய இரண்டு வாக்கியச் சாரியைகளும் சில குறிப்பிட்ட வாக்கியச் சூழல்களில் உறழும் நிலையும் தமிழில் காணப்படுகிறது. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

(17) [அமைச்சர் அங்கே இல்லை என்று / என்பது] எனக்குத் தெரியும்

இத்தகைய உறழ்ச்சி நிலை *தெரியும், தெரியாது* என்ற வினைகளைக் கொண்ட வாக்கிய அமைப்புகளில் காணப்படுகிறது.

4.3 செய்யும் வாய்பாட்டுப் பெயரெச்சம் செய்வதாகிய என விரிக்கற் பாலதாகும். இதனை *அமைச்சர் வருவதாகிய (=வரும்) செய்தி* என்ற எடுத்துக்காட்டில் காணலாம். இந்த விரிவாக்கத்தின் தாக்கம் *என்னும்* என்ற

பெயரெச்ச வாக்கியச் சாரியையின்மீதும் படிவதால் *என்பதாகிய* என்ற வடிவம் தோற்றம் கொள்கிறது. இதன் நிகழ்ச்சியை *அமைச்சர் வருவார் என்பதாகிய (= என்னும்) செய்தி* என்ற வாக்கிய அமைப்பில் காணலாம்.

வாக்கியச் சாரியைகள் காலக்குறிப்பினவல்லவாகலின் *என்பதாகிய* என்னும் விரிவாக்கம் *என்ற, என்னும்* வாக்கியச் சாரியைகளுக்கும் பொருந்துவதாகின்றது. *செய்வதாகிய* என்பதைச் *செய்வது + ஆகிய* எனப் பகுப்பாய்வு செய்வதைப் போல் *என்பதாகிய* என்பதை *என்பது + ஆகிய* எனப் பகுப்பாய்வு செய்ய முடியாது. ஏனெனில் இது *என்று, என்னும்* ஆகிய சாரியைகளின் உறழ்ச்சி வடிவமாகும். வாக்கியச் சாரியைகளை உருபனியல் ஆய்வுக்கு உட்படுத்த முடியாது. எனவே முன்பே குறிப்பிட்டதுபோல் இவை *என்* என்ற சாரியையின் மாற்றுருபுகளாகவே கருதப்படும். *என்* என்ற இருப்புக் கிளவியின் நிகழ்ச்சியை *நாயென் கிளவி* (= நாய் என்னும்/என்ற கிளவி) என்ற பெயர்த்தொடரில் காணலாம்.

இதன் நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களிலும் காணலாம். கருதுக:

> *இது பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென்* (சிலம்பு. பாயிரம். ஈற்றடி),
> *கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென்* (சிலம்பு. 14.218),
> *வந்து தோன்றினள் மதுரா பதியென்* (சிலம்பு. 22.157),
> *மலர்கொயப் புகுந்தனள் மணிமே கலையென்* (மணி.3.171),
> *உலகுதுயில் எழுப்பினன் மலர்கதி ரோனென்* (மணி.21.190),
> *பள்ளிகொண் டனனாற் பாவையை நினைந்தென்* (பெரு.4.4.146),
> *உறைகுவனர் மாதோ வுவகையின் மகிழ்ந்தென்* (பெரு.4.8.119)

இந்த எடுத்துக்காட்டுக்கள் வாக்கியச் சாரியைகளின் அடிநிலை வடிவமாக *என்* என்பது கொள்ளத்தக்கது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

References

Arden, 1976 (First Print 1891). *A Progressive Grammar of the Tamil Language*, Madras, The Christian Literature Society.

Bloch, Jules. 1954. *Structure of Dravidian Languages* (English Translation. Published in French in 1946), Pune, Deccan College.

Krishnamurti,Bh. 1969. *Konda or Ku:bi - A Dravidian Language,* Hyderabad, Tribal Culture Research & Training Institute.

Israel, M. 1979. *A Grammar of the Kuvi Language,* Thiruvananthapuram, Dravidian Linguistics Association.

Reddi,B.R.K. 1980. *Non Dravidian Element in Manda Syntax - A Study in Linguistic Convergence.* In Osmania Papers in Linguistics. Vol.6. Department of Linguistics, Osmania University, Hyderabad,

Singh, U.N. 1980. *Bol-e-An unresolved Problem in Bengali Syntax.* Indian Linguistics, Vol.41. No.3-4, Pune, Deccan College.

Sivakumar, S. 1981. *Noun Complementation in Tamil. In Dravidian Syntax.* Annamalai Nagar, Annamalai University.

Subrahmanyam, P.S. 2008, Dravidian Comparative Grammar - 1, Mysore, Centre of Excellence for Classical Tamil (CIIL).

தமிழ்மொழி கற்பித்தலில் பணிசார்ந்த அணுகுமுறை

சீதாலட்சுமி

சிங்கப்பூரில் தமிழ்மொழியைக் கற்றல் கற்பித்தல் என்பன தொடர்ந்து பல மறு ஆய்வுகள், கல்வியியல் ஆய்வுகள், கருத்தரங்கங்கள், மாநாட்டுப் படைப்புகள் மற்றும் பகிர்வுகளின் வாயிலாகத் தம்மை மேம்படுத்தி வருகின்றன. தொடக்கநிலை முதல் இளையர் கல்லூரி வரை கல்வி நிலையங்கள் தம் மாணவர்கள் விருப்பத்துடன் தமிழ் மொழி கற்கும் அணுகு முறைகளை அறிமுகப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. சிங்கப்பூரில் இரண்டாம் மொழிநிலையில் தாய்மொழி என்ற பெயரில் பெரும்பாலான மாணவர்கள் தமிழைக் கற்கும் புதியதொரு பரிமாணத்தைக் காட்டும்வகையில் பணி சார்ந்த அணுகுமுறை அறிமுகமாகிறது.

பணிசார்ந்த அணுகுமுறை

மொழியைச் சரளமாகப் பயன்படுத்துதலை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியவியலுக்கு அடிப்படை பணி சார்ந்த அணுகுமுறை (Task-based approach) என்கிறார் நூனன் (Nunan 1989:10). கருத்தறிதல், ஒன்றை மாற்றிச் செய்தல், புதிதாக உருவாக்கல் அல்லது தாம் பேச வேண்டிய மொழியில் இடைவினை யாடுதல் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதுதான் தொடர்புப் பணியின் ஒரு கூறு. இத்தகைய பணி, மாணவர்கள் எப்படிப்பட்ட மொழி வடிவத்தைப் பயன்படுத்துகிறோம் என்று நோக்க வைக்காது. மாறாக, என்ன பொருளை வெளிப்படுத்துகிறோம் அல்லது பெறுகிறோம் என்பதில் மாணவர்களைக் கவனம் செலுத்தவைக்கும். இத்தகைய பணி, ஒரு முழுமைத் தன்மை அடிப்படையில், தனது சொந்த உரிமையில் ஒரு தொடர்புச்செயலாகத் தனித்துத் தன்காலில் நிற்கும் தகுதியும் துணிவும் வாய்ந்ததாக அமையும்.

தொடர்புப் பணிகளை (communicative purposes) மேற்கொள்ளும் போது, அவை சார்ந்த கற்றலில் பங்கேற்கும் மாணவர்கள், அவர்கள் செய்யும் பணி தொடர்பான கலந்துரையாடலில் ஏற்புடைய அளவில் கருத்துகளைப் பெறுவதும், தம் கருத்துகளை வெளிப்படையாகக் கூறுதலும் இடம்பெறுதல் வேண்டும். இங்கு, பணிசார்ந்த அணுகுமுறையில் உள்ள படிநிலைகள்,

இரண்டாம் மொழி கைவரப்பெறுதலை மையமாகக் கொண்டிருப்பதாலும், இத்தகைய கைவரப்பெறல் மொழியியல் மற்றும் தொடர்புத்துறைப் போட்டித்திறன்கள் மேம்பட வழிவகுக்கும் என்பதாலும் மாணவர்கள் இங்குப் பெரும்பயன் பெறுவது மிகவும் இன்றியமையாததாகும் (Doughty & Williams, 1998). இத்தகைய வெற்றிகரமான மொழி கற்றல் என்பது மாணவர்கள், தாம் இயல்பான மற்றும் பொருள்பொதிந்த தொடர்பில் ஈடுபடும்போதுதான் அமையும். அதனால், அதற்கு வழிவகுக்கும் வகையில், மாணவர்கள் வாழும் சூழல், கலந்துரையாடல் தொடர்பான பயிற்றுக் கருவிகள், தொடர்புத்துறை விளையாட்டுகள், போலச் செய்தல், பங்கேற்று நடித்தல், இணை நடவடிக்கைகள் ஆகியன போன்ற அம்சங்கள் மொழி கற்றல் வகுப்பில் பெருமிடம் பெறவேண்டும். மேலும், வகுப்பறை மொழி கற்பித்தலில் அது தொடர்பான பயிற்றுனர்கள், வடிவமைக்கும் கற்பனை வளத்துடன் கூடிய பலவிதமான நடவடிக்கைகள் இரண்டாம் மொழி கற்றல், கற்பித்தலில் அச்சாணியாக அமைகின்றன (Skehan, 1966b:17). அத்தகைய அச்சாணிகளுள் ஒன்றாகப் பணிசார்ந்த அணுகுமுறை அமைகிறது.

ஆய்வாளர்கள் கருத்துகள்

பணி என்பது பொருள் அடிப்படையில் திறம்பட்ட தொடர்பு நிகழ உதவும் கடினத்தன்மை மிக்க திட்டம். அது எளிமையான பணித்திட்டமாக அமையாது (Breen, 1989). பணி என்பது ஒருவருக்காக அல்லது பலருக்காக இயல்பாக அல்லது சில, பல வெகுமதிகளுக்காக மேற்கொள்ளப்படும் செயல். அது வகுப்பறையில் இடம்பெற வேண்டும் (Long, 1985). வகுப்பறையில் பாடங்கள் கருத்துத் தொகுத்தல், ஒன்றைப் பிரதிபலித்தல், புதிதாக ஒன்றை உருவாக்கல் அல்லது வடிவத்தை மாற்றியமைத்தல் என்று அமைவதைவிடப் பொருளை மட்டும் நோக்கமாகக் கொண்டு நோக்கமொழியில் (Target Language) மாணவர்களை இடைவினையாடல் நடத்தவைக்கும் வகையில் அமைவது சிறப்பு. இங்குப் பணி என்பது, முழுமைத்தன்மை மற்றும் தன் சொந்தத் தகுதியில் ஒரு தொடர்புப்பணியாக அமையும் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் (நூனன்).

பணி என்பது மொழியை வடிமைத்தல் அல்லது மொழியைப் புரிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை அல்லது செயல் என்பது (Richards, Platt and Weber, 1985) ஆய்வாளர்களின் கருத்து.

ஒரு வேலையை முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்று வதற்கு வேண்டிய வழிகளைக் கண்டறிந்து, அதை எப்படி ஒரு முறையாக,

படிநிலைகளுடன் செய்து முடிக்கிறோமோ, அப்படி செய்து முடிக்கப்படும் பொருளுக்கு அல்லது இலக்குக்கு இன்றியமையாமை தந்து மொழியைப் பயன்படுத்தவைக்கும் நடவடிக்கை, பணி என இங்கு அழைக்கப்படுகிறது (Bygate, Skehan and Swain, 2001).

பணி சார்ந்த அணுகுமுறையும் மொழிப்பயன்பாடும்

மேற்கூறப்பட்ட பணி சார்ந்த அணுகுமுறையில் வெளியுலகில் என்ன செய்கிறோமோ அது வகுப்பறையில் நடக்க வேண்டும். அதாவது உண்மை வாழ்க்கைப் பணி (Authentic Task) என்பது மிக முக்கியமானது. இப்பணி என்பது கற்பவர்களின் விருப்பத்தைத் தக்கவைக்கக்கூடியதாகும், பொருளை அறிவது முக்கியமான நோக்கமாக உள்ளதா என்றும், முடிவில் பயன் உள்ளதா என்றும் பார்க்கவேண்டும். அவ்வாறு இருப்பின் அதைப் பணிசார்ந்த அணுகுமுறை எனக் கொள்ளலாம் (ஜேன் வில்லிஸ், 2000). இத்தகைய பணியைச் செய்ய உண்மை வாழ்வில் இடம்பெறும் தொடர்புக் கருவியான பேச்சுமொழிப் பயன்பாடு மிக இன்றியமையாதது. ஏனெனில் நாம் எழுத்து மொழி வாயிலாக வெளியுலகத் தொடர்பு நிகழ்த்த முடியாது. பேச்சுமொழிதான் அங்கு முக்கிய இடம்பெறுகிறது. இரட்டை வழக்கு மொழியான (Diglossic language) தமிழில் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடைவெளி அதிகமாக உள்ள நிலையில் பேச்சுமொழியைப் பயன்படுத்துவது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. மேலும் பணியைச் செய்யும்போது அதில் படிநிலைகள் உள்ளன. அதாவது மொழியைப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல் வேலையைச் செய்யும் படிநிலையிலும் மாணவர்கள் கவனம் செலுத்துவார்கள். மாணவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களைப் பாடத்தோடு இணைத்துப் பார்ப்பார்கள். வாழ்வில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அனுபவங்கள் இருக்கும். அவற்றை அவர்கள் பணி சார்ந்த அணுகுமுறையைச் செய்யும்போது பாடத்தில் பயன்படுத்த வழியுண்டாகிறது. மாணவர்கள் பள்ளிக்கு வருவதற்கு முன்னால் இல்லம் இருக்கிறது. பள்ளிக்குப் பின்னால் அவர்கள் வாழும் சமூகம் இருக்கிறது. இம்மூன்றையும் ஒன்றிணைக்கக்கூடிய அளவில் மொழிப்பயன்பாடு பணிசார்ந்த அணுகு முறையில் இடம்பெற வேண்டுமென ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

பெங்களூரில் அறிமுகப்படுத்திய இம்முறை, ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக மற்றும் அயல்மொழியாகக் கற்கும் சூழல்களில் பெருமிடம் பெறுகிறது. இங்கு, பணி என்பது பாடத்திட்டம், வகுப்பறைக் கற்பித்தல்,

கற்பவரை மதிப்பிடல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டாக்குகிறது. கற்பவர்களுக்குத் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் அவர்கள் சிந்தித்து அந்தச் சிந்தனைப் படிநிலைகளின் வழியே அப்பணியைச் செய்து முடிக்க அல்லது ஏதேனும் ஓர் இலக்கை அடைய அவர்களுக்குத் தேவையான நடவடிக்கை எனப்படுகிறது (Prabhu, 1987).

பணி என்பது முழுமையாக அமையும் ஒரு நடவடிக்கை. இங்குப் பணி முடிவு என்பது முன்னுரிமையாக அமையும். அதாவது பணியை முடிக்க வேண்டும். அதே சமயம் பணி எவ்வாறு நடைபெற்றது என்பதன் அடிப்படையில் அதைப் பற்றிய மதிப்பீடு அமையும்.

நாம் வாழ்க்கையில் விரும்பிச்செய்யும் 101 பணிகளை வகுப்பறையில் கொண்டுவர இந்தப் பணி சார்ந்த அணுகுமுறையில் வழியுண்டு (லாங், 1985:89). அதாவது அன்றாட வாழ்க்கையில் நாம் எழுந்தது முதல் இரவு தூங்குதல் வரை எவ்வளவோ பணிகளைச் செய்கிறோம். அவ்வகையில் நாம் செய்யும் பணிகளைப் பணிசார்ந்த அணுகுமுறையில் பள்ளியில் செய்ய வழியுண்டு என்கிறார். அதன் மூலமாக அவர்களது தன்னம்பிக்கை அதிகரிக்கும். அதாவது இந்த மொழியை நாம் எங்கே பயன்படுத்தப் போகிறோம் எனக் கருதாமல் வெளியுலகில் நடப்பது போலவே நாம் பள்ளியில் செய்யும்போது அதை அவர்கள் கண்கூடாகக் காண்கிறார்கள். அப்போது நமது மொழியையும் வெளியுலகத் தொடர்புக்குப் பயன்படுத்த முடியும் என்ற தன்னம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுகிறது. சிங்கப்பூரில் நாம் ஆங்கில மொழி வாயிலாகவே வாழ்க்கையை நடத்திவிட முடியும். எனவே தமிழ்மொழி எதற்கு? என மாணவர்கள் சிலர் கேட்கிறார்கள். ஆனால் நம்முடைய அடையாளத் தையும் உணர்வையும் மனத்தில் பதியவைப்பதற்கும் இந்த மொழி வாயிலாக வாழ்க்கையை நடத்த முடியும் எனத் தெரிந்து கொள்வதற்கும் மிக உதவியாக இருக்கும். இது குறித்துத் தேசியக் கல்விக் கழகத்தில் இடம்பெற்ற ஆய்வும் (சீதாலட்சுமி மற்றும் பலர், 2005) கல்வி அமைச்சு (2005) வெளியிட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியவியல் குறித்த மறுஆய்வுக் குழு அறிக்கையும் கருத்துகளைத் தெரிவிக்கின்றன. சிங்கப்பூரின் எதிர்காலத் தமிழர் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற ஆய்வில், அவர் பின்வரும் வகையில் இருக்கவேண்டும் என்று அவ்வறிக்கை கூறுகிறது.

எதிர்காலச் சிங்கப்பூர்த் தமிழர் பற்றிய தொலைநோக்கு பின்வருமாறு:

- சிங்கப்பூர்த் தமிழர்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டும் பேசும் ஆற்றலுடையவர்களாக இருப்பார்கள். அப்போது, பலமொழி வழங்கும் சிங்கப்பூரில்

அவர்கள் மிகச்சிறந்த முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள முடியும்.

- சிங்கப்பூர்த் தமிழர்கள் ஒருவரோடு ஒருவர் தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் உரையாடுவார்கள்.
- சிங்கப்பூர்த் தமிழர்கள் தங்கள் வீடுகளில் சிரமமின்றித் தமிழைப் பயன்படுத்துவார்கள்; தம் பிள்ளைகளோடு தமிழிலேயே பேசுவார்கள்.
- சிங்கப்பூர்த் தமிழர்கள் தமிழ் நாளேடு படிக்கக் கூடியவர்களாகவும் வானொலி தொலைக்காட்சிச் செய்திகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.
- தமிழ் மொழியில் ஆற்றல் மிக்க சிங்கப்பூர்த் தமிழர்கள் சிலர் ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றுவார்கள். தமிழ்த் தகவல் தொடர்புச் சாதனங்கள், இணையத்தளம், இலக்கியம், நடிப்புக்கலை, கல்வி, ஆய்வு போன்ற துறைகளில் அவர்கள் சிறந்து விளங்கி, அனைத்துலக அங்கீகாரத்தையும் பெறுவார்கள் (கல்வி அமைச்சு, 2006).

இத்தகைய எதிர்காலச் சிங்கப்பூரர்கள் உருவாக அவர்கள் தம் மொழியை இல்லத்திலும் பள்ளியிலும் சமூகத்திலும் பயன்படுத்தும்வகையில் சிறந்த அடித்தளம் அமையவேண்டும். அதற்கு அவர்கள் மொழியையும் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு பாடங்களை, வகுப்பறை அனுபவங்களை அமைக்கவேண்டும்.

வீடு என்பதே ஒரு நிறுவனம். அங்கு நிறைய அறிவுரைகள் நமக்கு இருக்கின்றன. அது போன்ற அறிவுரைகள் அனைவருக்கும் இருக்கும். அதாவது தொலைபேசி எண்ணை மனப்பாடம் செய்யும்போது சிலர் இரண்டிரண்டாகவும், சிலர் மூன்று மூன்றாகவும் மனப்பாடம் செய்வோம், வீட்டைப் பூட்டிவிட்டு அதைச் சரிபார்ப்பதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான உத்தியைப் பயன்படுத்துவோம். அவை போன்றவற்றை நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதற்குப் பணிசார்ந்த அணுகுமுறையில் வாய்ப்பிருக்கும். இது போன்ற காரணங்களால் மொழி கைவரப்பெறல் (Language acquisition) தானாக வரும். அதாவது மொழியைச் சிரமப்பட்டுப் படிக்க வேண்டாம். அது, தானாகவே அதாவது இயல்பாகவே கைவரப்பெறும்.

உண்மை வாழ்வு சார்ந்த பணிகளைச் செய்ய வழிவகுக்கும் இவ் வணுகுமுறையில் இடம்பெறும் பணிகளுக்குக் குறிப்பிட்ட அமைப்புமுறை

(Structure) உண்டு. மேலும் இந்த அமைப்புமுறை, குறிப்பிட்ட பணிக்கென அமையும் சிறப்புச் சொற்கோவைத் தொகுதியுடன் (Special vocabulary collection) தொடர்புடையது. நாம் பணி செய்யும்போது முழு வாக்கியமாகப் பேசமாட்டோம். இலக்கணத்தை அங்குப் பயன்படுத்த மாட்டோம். பேச்சு மொழியைத்தான் அதிகமாகப் பயன்படுத்துவோம். மாணவர்களிடம் மொழி தொடர்பான திறன்கள், எப்படி வேலையைத் திறம்பட நடத்தவேண்டும் எப்படி மொழி வழியாக வாழ்க்கையை நடத்த முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இது உதவியாக இருக்கும். இலக்கணம், எழுவாய், பயனிலை களெல்லாம் இங்கு வெளிப்படையாக வரா. ஆனால் அவை அனைத்தும் இங்கு மறைமுகமாக வரும். பொதுவாக நாம் பாடத்தை நடத்திவிட்டு அது பற்றிக் கலந்துரையாடவோ, அதை வைத்து ஒரு கட்டுரை எழுதவோ சொல்வோம். ஆனால் பணி சார்ந்த அணுகுமுறையில், பணியைச் சரியாகச் செய்வதிலேயே மாணவர்கள் கவனம் செலுத்துவார்கள். மொழியை நாம் சரியாகப் பேசுகிறோமா போன்றவற்றில் அவர்கள் கவனம் செலுத்த மாட்டார்கள். ஆனால் தொடர்பு அங்கு நிகழ்ந்துகொண்டிருக்கும். வேலை நடைபெறுவதற்கு அவர்கள் மொழியை இடைவினையாடிக் கொண்டிருப்பார்கள். மொழியைச் செம்மையாகக் கற்பார்கள்.

ஜேன் வில்லிஸ் எனபவர் படைப்பு, பயிற்சி, தயாரிப்பு (PPP) (Presentation, Practice and Product) என்பதிலிருந்து மாறுபட்டது என்கிறார். அந்த முறையில், இங்கு ஆசிரியர் முதலில் மொழியில் உள்ள ஒரு பகுதியையும் அது தொடர்பான பொருளைப் பெற உதவும் சூழலையும் தருவார். பிறகு, அவர் தம் கருத்தை, பனுவல்வழியே, சூழல் உருவாக்குதல் வழியே அல்லது உரையாடல் எழுதுவதன் வழியே குறிப்பிட்ட மொழிக்கூறைப் பயன்படுத்தக் கூறுவார்.

மாணவர் உடனே, ஒரு குறிப்பிட்ட கட்டுப்படுத்தப்பட்ட பட்டியல் வழியே குறிப்பிட்ட மொழிக்கூறைப் பயன்படுத்தி அதை அறிவர். இங்கு, குழுவாக அல்லது தனியாக இணைந்து வாசித்தல், கோடிட்ட இடங்களை நிரப்புதல், வாக்கியத்தை முடித்துவைத்தல் எனப் பல நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

பிறகு, தயாரிப்பு நிலையில், சுயமாகத் தயாரிக்கும் நிலைக்கு முன்னேறுவர். இங்கு, அவர்கள் சுயமாகத் தம் பயிற்சியைச் செய்வர். அவர்களது பயிற்சி சார்ந்த பணி என்பது பங்கேற்று நடித்தல், கதை உருவாக்குதல் என அமையும். இம்முறையில் மாணவர், குறிப்பிட்ட காலம் முடிந்ததும் தாம் பயின்ற மொழிக்கூறைப் பிற இடங்களில் பொருத்திப் பார்க்க

இயலாது சிரமப்படுவர். சில சமயங்களில் பயன்படுத்தப்பட்ட மொழிக்கூறை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தித் தயாரிப்பு (Product) என்ற வரிசைமுறைத் தொடக்கத்தில் ஆரம்பித்து வருவது மாதிரி பணிசார்ந்த அணுகுமுறை இருக்கும் என்கிறார். இங்கு மொழி நோக்கிய சிந்தனையே அதிகமாக இருக்கும். மொழியை நாம் எவ்வாறு பணிக்குப் பயன்படுத்துகிறோம், அதை எவ்வாறு இலாவகமாகப் பயன்படுத்துகிறோம் என்பதிலேயே சிந்தனை அதிகமாக இருக்கும். இது குறித்து, ஜேன் வில்லிஸ் கருத்தாய்வு மாதிரிச் சட்டத்தினை(A Framework for Task-Based Learning) உருவாக்கியிருக்கிறார். அதில், தலைப்பு மற்றும் பணியை அறிமுகப்படுத்தும் நிலைக்கு முந்திய பணி, பணித் திட்டமிடுதல் மற்றும் அறிக்கைதரும் பணிச் சுழற்சி, பகுப்பாய்வு மற்றும் பயிற்சி என்னும் மொழியை இலக்காகக் கொண்ட படிநிலை என மூன்று படிநிலைகள் இடம்பெறும்.

மாணவர்கள் இரண்டாம் மொழியைக் கற்கும்போதும் அதைக் கைவரப் பெறும்போதும் அவர்களது திறமை மிக்க முதல் மொழிக்கும் அவர்கள் அறிந்த பிறமொழிகளுக்கும் இடையிலான மொழிக்கட்டமைப்பை மறு வடிவமைக்கிறார்கள். இதைப் புரிந்துகொள்ளும்போது, சிங்கப்பூரில் தமிழ் வகுப்பில் மாணவர்கள் ஏன் ஆங்கிலத்தில் சிந்தித்துப் பதில் கூறுகிறார்கள், ஆங்கில வாக்கிய அமைப்பை ஏன் பின்பற்றுகிறார்கள், ஒரு சொல்லுக்குப் பொருள் கேட்டால் ஆங்கிலத்தில் அதன் மொழிபெயர்ப்பைக் கூறுகிறார்கள் என்று அறியமுடியும். ஆங்கிலம் படித்த மாணவனிடம் பூனை என்றால் அவன் புரிந்துகொள்வதைவிட ஆங்கிலத்தில் ‘கேட்’ என்றால் அவனுக்குப் பூனையின் வடிவம் மனக்கண்ணில் தோன்றும். தமிழ்பேசும் மாணவனிடம் அவ்வாறு ஆங்கிலத்தில் கூறுவதைவிட, பூனை என்று கூறினால்தான் பூனையின் வடிவம் அவனது மனக்கண்ணில் தோன்றும். இதற்கு அவர்கள் சிறுவயது முதல் புழங்கிய மொழி, கல்விக்கூடத்தில் எந்த மொழியில் பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டார்கள் என்ற நிலை ஆகியவை காரணங்களாக அமைகின்றன. இத்தகைய சிந்தனைகளை ஆசிரியர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளப் பணி சார்ந்த அணுகுமுறை பேருதவி புரிகின்றது. தற்காலத்தில் இத்தகைய பணி சார்ந்த அணுகுமுறையைப் பயன்படுத்திக் கற்றல் மற்றும் கற்பித்தல் அதிகமான ஆய்வாளர்களைப் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளது.

பணி என்பது என்ன? இதில் ஒருமுகப்படுத்தப்பட்ட பணிகள் யாவை? ஒருமுகப்படுத்தப்படாத பணிகள் யாவை? இத்தகைய பணி, நடவடிக்கைகள்,

பயிற்சிகள் என்பனவற்றைக் குறிக்கும் activity, exercise, drill ஆகிய வற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்று பல வினாக்கள் இன்று எழுந்துள்ளன. இன்னும் தெளிவான விளக்கம் அல்லது வரையறை என்பது முழுமையாக இல்லாத நிலையில், பொருளை நோக்கிய மொழிப்பயன் பாட்டுடன் கூடிய ஒரு செயல், பணி எனப்படும் என்று கூறலாம். அப்படி யென்றால் நடவடிக்கை என்பது, அது வடிவம் சார்ந்த மொழிப்பயன்பாடு எனப்படுகிறது. இங்கு, தினசரி வாழ்வில் மொழியைப் பயன்படுத்துபவர்கள் பயன்படுத்தும் மொழி ஊடு செயல்களைப் பணிகள் எனலாம். பணிகளில் மொழியைப் பயன்படுத்துபவர்கள் சிந்தனைத் திறன்களை அதிகமாகப் பயன்படுத்துபவர்களாக அமைவர். இரண்டு படங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பார்ப்பதைப் பணி என்பதைவிட, விமானப் பயணத்துக்கு அனுமதிச் சீட்டு வாங்குவது, பேருந்தில் ஓட்டுநரிடம் வழி கேட்பது, பூக்கடையில் பூ வாங்குவது, பூ கட்டுதல், கோலம் போடுதல், சமையல் நிகழ்ச்சிகளைப் பார்த்துச் சமையல் செய்தலைப் பற்றிப் பேசுதல், புதிதாக வரும் விருந்தினர்தம் விருப்புரிமைக்கு ஏற்ப அவரைப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுதல், கடைக்குப் போய்ப் பொருள் வாங்கிவருதல், சாப்பாட்டுக் கடையில் சாப்பாடு வாங்குவது ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மொழியைப் பயன்படுத்துகிற வேலைகள்தாம் பணிசார்ந்த அணுகுமுறையில் முக்கியமாகத் தேவையான ஓர் அம்சம். ஏனெனில் இவை, பள்ளிக்கு வெளியே நிகழும் மாணவர்களின் உண்மை வாழ்வுடன் தொடர்புடைய பணிகள் ஆகும். மொழியைப் பயன்படுத்தாமல் அமைதியாகச் செய்யும் வேலைகளை இந்தப் பணிசார்ந்த அணுகுமுறையில் ஆய்வாளர்கள் குறிப்பிடவில்லை.

பணிசார்ந்த அணுகுமுறைகளில் மொழி உள்ளீடு

பணி சார்ந்த அணுகுமுறையில் முக்கிய நோக்கம் என்னவென்றால் அது மொழியைப் பயன்படுத்தித் தொடர்புத்திறன்களை மேம்படுத்துவதுதான். இங்கு மொழி எனும்போது அது மாணவர் பயிலும் இரண்டாம் மொழியாக அல்லது அயல் மொழியாக அமையும். ஆனால், சிங்கப்பூரைப் பொறுத்தவரை தமிழ் மாணவர்கள் தம் வாழ்க்கையோடு இயைந்த அம்மொழியை இரண்டாம் மொழி நிலையிலும் சிலர் அயல் மொழி நிலையிலும் படிக்கின்றனர். அத்தகைய மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வழங்கும் உதவியும் வாய்ப்புகளும் மிகவும் இன்றியமையாதன.

மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அதிக அளவில் மொழியைக் கேட்கவும் பிறகு அவை பற்றிச் சிந்திக்கவும் தொடர்ந்து தாமும் பயன்படுத்திப் பேசவும் படிப்படியே வழிவகைகள் செய்யவேண்டும். அவ்வகையில் பணிகளை முதல் தலைமுறை, இரண்டாம் தலைமுறை மற்றும் மூன்றாம் தலைமுறைப் பணிகள் என்று படிப்படியே வரையறுத்து அறிமுகப்படுத்த வேண்டும்.

முதல் தலைமுறைப் பணிகள் எனும்போது, அவர்களுக்கு மிகவும் எளிதாக, நேரடியாகத் தொடர்புடைய அம்சங்கள் குறித்துக் கலந்துரையாட அல்லது பேச வழிசெய்யவேண்டும். எடுத்துக்காட்டுக்குப் பின்வருவன வற்றைக் கூறலாம்.

- மைக்கேல் ஜாக்சன் பாடியபடி ஆடுவதுபோல் எப்படி முயற்சி செய்யலாம்?
- வீட்டுக்கருகில் உள்ள பெருவிரைவு இரயில்நிலையத்துக்கு எவ்வாறு செல்வது?
- ரொட்டியை எப்படி உணவாக வடிவமைப்பது?

இரண்டாம் தலைமுறை எனும்போது மாணவர்களுக்குப் பின்வரும் பணிகளைக் குறிப்பிடலாம்.

- எனது பண்பாட்டில் வாழை இலை பெறும் இடம்
- சிங்கப்பூரில் சீனர்களின் உணவு முறைக்கும் அவர்களது பாரம்பரியத்துக்கும் தொடர்பு இருக்கிறதா?
- இந்திய உணவுக்கும் இந்திய வாழ்க்கை முறைக்கும் தொடர்பு இருக்கிறதா?

மேற்கூறப்பட்டவற்றை மாணவர்கள் உடனடியாகத் தாமே முழுமையாகச் சிந்தித்துக் கூற முடியாது. ஏனெனில் அவர்கள் வீட்டிலுள்ள பெற்றோரிடம் கருத்துகளைக் கேட்டல், இணையத்தில் தேடல், ஆசிரியரிடம் கருத்துகளைக் கேட்டல், நூல்களை வாசித்தல் என்று சிந்தித்துப் பிறகு பணிகளைச் செய்ய முடியும்.

மூன்றாம் தலைமுறைப் பணிகள் எனும்போது தாமறிந்த வாழ்க்கையுடன் தம் வயது, அனுபவம் ஆகியவற்றை இணைத்துப் பணிகளைச் சிந்தித்துச் செய்வது இங்கு இடம்பெறும். எடுத்துக்காட்டுக்கு, ‘சிங்கப்பூரில் இளையர்கள்

ஆசிய மற்றும் மேற்கத்திய வாழ்க்கைமுறைக்கு இடையில் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சில நிலைகளில் தெளிவான புரிந்துணர்வு இல்லை. இதற்கு அதே இளையர் வயதைச்சேர்ந்த உங்களது வழிகாட்டுதல் யாது?' என்று வினா கேட்டு அதற்கு விடையாக அவர்கள் பணி மேற்கொள்ளும் வகையில் பாடம் அமையலாம்.இந்நிலையில் அவர்களுக்குப் பல நிலைகளில் செய்திகள் குறித்துச் சிந்திக்கும் வகையில் பணிகள் அமையும். ஆனால் படிநிலை அடிப்படையில் சிந்தனை அங்கு இடம்பெறும். அதனால் அவர்களது மொழியும் மெல்ல மெல்ல மேல்நிலைக்கு உயரும்.

பணிசார்ந்த அணுகுமுறைகளில் மொழி உள்ளீடு (language input) என்பது இன்றியமையாத அம்சம். கிராஷனின் (Krashan's theory of Second Language Requisition) இரண்டாம் மொழி கைவரப்பெறும் தேற்றத்தில் (Krashan) மொழியின் பொருள்பொதிந்த இடைவினையாடலுக்கு வகுப்பறை வழிசெய்ய வேண்டும் (Krashan, S.D., 1985) எனலாம். தம்மையறியாமல் மொழியைக் கற்கும்போக்கு இரண்டாம் மொழி கற்றல், கற்பித்தலில் இடம்பெறாது. எனவே, மாணவர்கள் மொழியை நன்கு பயன்படுத்த உரிய கால இடைவெளி தந்து அவர்களது மழலை மொழி போன்ற ஆரம்ப மொழிக்கு மதிப்பளித்து அவர்கள் அதிகம் பேச வழிவகுக்கவேண்டும். இங்கு, மொழி என்பதில் சரியான இலக்கணம், கருத்து என்பதைவிட மொழியைப் பயன்படுத்த மாணவர் முயற்சி செய்வதே இன்றியமையாதது.

இது தொடக்கநிலையில் கீழ்வகுப்பு (lower primary) மாணவர்களைவிட மேல்வகுப்பு (upper primary) மாணவர்களுக்கு மொழியைப் புழங்கக் கூடுதல் வாய்ப்புகளை வழங்கும். உயர்நிலை மாணவர்கள் தம் அடுத்த நிலைக்குச் செல்லப் பெரிதும் உதவியாக அமையும். இது தங்களது வாழ்க்கை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும், மொழியைப் பயன்படுத்தித் தம் சிந்தனை மூலமாகப் பல புதிய செயல்களைச் செய்வதற்கும் உதவியாக இருக்கும். இது பாரம்பரியமான ஆசிரியர் கற்பித்தலிலிருந்து மாறுபட்டு இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இங்கு ஆசிரியர்கள் மாணவர்கள் தாம் செய்யும் பணிகளின்போது எவ்வாறு மொழியைப் பயன்படுத்திப் பணிகளைச் செய்து முடிக்கிறார்கள் என்று மட்டுமே பார்ப்பர். அவர்கள் எப்படி பேசுகிறார்கள், எழுவாய், பயனிலை எல்லாம் சரியாக இருக்கின்றனவா எனக் கவனிக்க மாட்டார்கள். அவ்வகையில் ஆசிரியர் கற்பிப்பவராக இல்லாமல் பங்கேற்பாளராகவும், கவனிப்பாளராகவும், கற்றுக் கொடுப்பவராகவும் இருக்கிறார். மாணவர்கள் அறிவை உருவாக்கித் தருபவர்களாக இருக்கிறார்கள்.

இந்த அணுகுமுறையில், மாணவர்கள் தம் கருத்துரைப்பார்கள், ஒன்றைத் தொகுப்பார்கள், ஒருவரைப்/ஒன்றைப் போலச்செய்வார்கள், தம் கருத்தைப் பிறர் ஏற்க வழிவகுப்பார்கள் எனத் தொடர்புகளுக்கு வேண்டிய அம்சங்களுடன் மொழியைப் பயன்படுத்த முடியும் என்று நூனன் கூறுகிறார்.

இலக்கணம் கற்பிப்பது என்பது விதியை விளக்கிப் புரியவைப்பது என்பதிலிருந்து அனுபவத்தின்வழியே மற்றும் உண்மை வாழ்வு எடுத்துக்காட்டுகளின் வழியே இலக்கணத்தை விதிகூறாமல் புரிந்து, அறிந்து பயன்படுத்தும் அணுகுமுறை ஆகும். பாரம்பரிய இலக்கணம் நோக்கிய நடவடிக்கைகளுக்கும் இத்தகைய பணி தொடர்பான அணுகுமுறைகளைக் கொண்ட பாடங்களுக்கும் இடையே ஒப்பீட்டை மேற்கொள்வது பயனுடையது. பாரம்பரியமாக இலக்கணம் கற்பிக்கும் பாடங்களில் இடம்பெறும் நடவடிக்கைகளுக்கும் இங்கு அதிகமாகப் பேசப்படும் தொடர்புத்துறைப் பணி தொடர்பான வேலைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஆய்வாளர்கள் (Brumfit, 1979, Ellis, 1994, Skehan, 1996b) சுருக்கித் தந்துள்ளனர். அவற்றைப் பார்ப்போம்:

இலக்கணம் நோக்கிய நடவடிக்கைகள்

- வகுப்பறை மொழிப் பயன்பாட்டை எதிரொலித்தல்
- மொழியின் சரியான எடுத்துக்காட்டுகளை உருவாக்குவதில் அதிக முக்கியத்துவம் தரப்படல்
- மொழியைப் பிறரிடம் காட்டும் வகையில் உருவாக்குதல்(கற்றலுக்கான சான்றாக இங்கு மொழி அமைதல்)
- வெளிப்படையாகத் தெரியப்படுத்தும் அறிவுக்கு முக்கியத்துவம் தரல்
- கவனமாகப் பேசும் பேச்சுமுறைக்கும் மேற்பார்வையுடன் கூடிய பேச்சு முறைக்கும் முக்கியத்துவம் தரல்
- கட்டுப்படுத்தப்பட்ட மாணவர் படைப்பை எதிரொலித்தல்
- சூழலுக்கு வெளியில் இடம்பெறும் மொழியைப் பயிற்சி செய்தல்
- மொழியின் சிறிய எடுத்துக்காட்டுடன் கூடிய பயிற்சியை மேற்கொள்ளுதல்
- உண்மை வாழ்வுடன் தொடர்புடைய தொடர்பு இங்குத் தேவையில்லை

பணிசார்ந்த அணுகுமுறை (Task-based approach) நோக்கிய நடவடிக்கைகள்

- இயல்பான மொழிப்பயன்பாட்டை எதிரொலிக்கும்
- மொழியின் உள்ளார்ந்த அறிவுக்கு முக்கியத்துவம் தரல்
- குறிப்பிட்ட மொழியின் தினசரிப் பயன்பாட்டு முறைக்கும் பேச்சு முறைக்கும் முக்கியத்துவம் தரல்
- திட்டமிடப்படாத செயல்பாட்டை எதிரொலித்தல்
- தொடர்ந்து மேம்படுத்துதல், கருத்தைத் தம் சொந்த மொழியில் கூறுதல், சரியில்லாத இடங்களில் சரி செய்தல், மறுபடியும் உருவாக்கிக் கூறுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்
- இப்படித்தான் இருக்கும் என்று எப்போதும் முன்னுரைக்கப் படாத நிலையில் மொழியை உருவாக்கிப் பயன்படுத்துதல்
- மாணவர்கள் தாங்கள் பயன்படுத்த விரும்பும் சொற்கள் மற்றும் மொழியைத் தெரிவு செய்ய அனுமதித்தல்
- உண்மைத் தொடர்பு நடத்துதல் இங்கு அதிகமாகத் தேவைப்படுகிறது

இத்தகைய பணி சார்ந்த நடவடிக்கையில் மாணவர்கள், தமக்கு ஏற்புடைய அவசியமான தொடர்புத்திறன்களை மட்டுமின்றி ஏற்புடைய தரத்திலான செயல்பாட்டைப் படைக்கவும் வேண்டிய திறம் பெறுகின்றனர். இத்தகைய பணிவேலை, தரமில்லாத தமிழை எடுத்துக்காட்டப் பயன்படுத்தப்படுவதில்லை.

பணி சார்ந்த நடவடிக்கைகள்: பலம் மற்றும் பலவீனம்

பலமான மற்றும் பலவீனமான பணி சார்ந்த நடவடிக்கைகளைப்பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Skehan, 1966a). அதைக் குறிப்பிடும்போது, பலமான வடிவம் என்று கூறும்போது பணிகள் மொழியின் அடிப்படைப் பகுதியாக இருப்பதுடன், மொழி கைவரப்பெறல் படிநிலையினை உருவாக்கும் வகையில் அமைந்திருக்கும். பலவீனமான வடிவம் என்பது, மொழி கற்பித்தலில் முக்கியமான பகுதியாக அமையும். ஆனால், மிகவும் கடினமான ஆசிரியவியல் சூழல் சார்ந்த அம்சங்களில் கற்பித்தலுக்கு முக்கியத்துவம் தரும் ஒன்றாக அது அமையும்.

இத்தகைய பணி சார்ந்த வேலைகளில் மாணவர்களிடையே ஆசிரியர்கள் விரும்பக்கூடிய ஏற்புடைய மொழியியல் போட்டித்திறனை எவ்வாறு மேம்படுத்துவது? இலக்கணம் என்பது பணி சார்ந்த வேலையில் இடைத்தரகராகப் பங்காற்றுகிறது. அத்தகைய இலக்கணம் என்பது இடைத்தரகராக இருந்தாலும்கூட அது மொழிப் பயன்பாட்டில் முக்கிய இடம்பெறுகிறது. அதன் சக்தி மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் அதிகாரத்தையும் அங்கீகாரத்தையும் கொடுக்கக்கூடியதாக அமைகிறது. இத்தகைய பணிகளில், ஆசிரியரும் மாணவரும் குறிப்பிடத்தக்க அளவிற்கு நெகிழ்வுத்தன்மையைப் பின்பற்றுவர். அவர்களிடையே குறிப்பிட்ட கற்றல் நோக்கங்களும் பிரச்சினை தீர்க்கும் பணிகளும் தரப்பட்டிருக்குமே தவிர, மிகவும் சிறப்பான தனிப்பட்ட மொழியில் சொற்கள் அல்லது தொடர்கள் தரப்பட்டிருக்கா. (குமாரவடிவேலு, 1991:99). அதாவது பெரும்படம் (macro picture) இடம்பெற்றிருக்குமே தவிர, நுண்படம் (micro picture) இடம்பெற்றிருக்கா. மாணவர்கள் வகுப்பறையில் தொடர்புத்துறை சார்ந்த பணிகளை மேற்கொள்ளும்போது பொருளைப் புரிந்துகொள்ளுதல், பொருளை எடுத்துரைத்தல், கருத்தறிதல் சார்ந்த சோதனைகள், உறுதி செய்யும் சோதனைகள், சரிபார்க்கும் கோரிக்கைகள் ஆகியவற்றைப் போன்ற பல படிநிலைகளைப் பின்பற்றுவர். இவை அவர்களிடையே இடம்பெறும் மொழியைக் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றி வடிவமைக்க வழிசெய்கின்றன. இதனால் அவர்களுக்குத் தன்னம்பிக்கையும் சரளமும் அதிகரிக்கும்.

பணிசார்ந்த வேலைகளைப் பற்றிய சிந்தனைகள்

பணிசார்ந்த வேலை என்பது சரளம், வகுப்பறை ஊக்குவிப்பு, மாணவர்களின் ஆர்வ நிலையை அதிகரித்தல், உண்மைநிலை மொழியைப் பயன்படுத்துதல் எனப் பல சாதகமான அம்சங்களைப் பெற்றிருந்தாலும் கல்வி யாளர்களிடையே சில ஆழமான சிந்தனைகளும் தென்படவே செய்கின்றன. இங்கு, மாணவர்களிடையே பொருள் தொடர்பான உரையாடலில் எவ்வாறு தாம் கொண்ட பொருளை மற்றவர்களிடம் எடுத்துரைத்து அது குறித்துச் சரியான விடையைப் பெறுகின்றனர் என்ற சிந்தனை எழுகின்றது. ஃபோஸ்டர் என்பவர் மேற்கொண்ட ஆய்வில், ஆங்கிலத்தை அயல் மொழியாகக் கற்கும் மாணவர்கள் தகவல் விடுபட்டதைக் (information gap) கண்டறிந்திடும் பணி சார்ந்த வேலையில் இருவராகவும் சிறு குழுவினராகவும் இணைந்து செயல்பட்டனர். அவர், ஒருவருக்கு ஒருவர் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் வகையிலான இடைவினையாடல், மாற்றம் செய்யப்பட்ட உச்சரிப்புகள்

ஆகியவற்றைப் பார்க்கும்போது அவை, இரண்டாம் மொழி கைவரப்பெறல் குறித்த தேற்றங்களுக்கு மாற்றங்களாக இருந்தன என்கிறார். ஏனெனில் இரண்டாம் மொழி கைவரப்பெறல் சூழலில், பொருளைப் பற்றிய பேச்சு வார்த்தை என்பது, ஓர் உத்தி அல்ல. மாறாக, தங்களது புரிந்துணர்தலில் தகவல் விடுபட்டதாக உணரும்போது பயன்படுத்தும் ஓர் அம்சம் என்கிறார். அதாவது, அவர்களுக்குக் கைகொடுக்கும் கையாக அது அமைகிறது.

மற்றொரு சிந்தனை எனும்போது, அதிக அளவிலான பணி சார்ந்த வேலை நடவடிக்கைகள் மாணவர்களின் மொழியியல் போட்டித்திறனில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியதாகும். மொழி வகுப்பறைகளில் கவனிக்கும்போது, மொழியியல் துல்லியத்திறன்களில் குறைந்த அளவிலான தரங்களே கிடைத்துள்ளன. இதனால், மாணவர்களின் மொழித்திறன்களை மேம்படுத்துவதில் சவால் இருக்குமோ என்று ஆசிரியர்கள் கவலைப்படக் கூடும். ஆனால், உரிய ஊக்குவிப்பினாலும் வழிகாட்டிக் குறிப்புகளினாலும் அவர்களது மொழித்திறன்களை மேம்படுத்தமுடியும்.

தேசியக் கல்விக் கழகத்தில் ஆசிரியவியல் குறித்த ஆய்வு மற்றும் பயிற்சி மையத்தில் மேற்கொள்ளப்பட்ட பாடத்திட்ட மறுஆய்வு மற்றும் பரிந்துரைகள் குறித்த ஆய்வில் (சீதாலட்சுமி மற்றும் பலர், 2005) குறிப்பிடத்தக்க பரிந்துரையாக வகுப்பறைப் பணிகளை மறுவடிவமைத்தல் (Redesign Tasks) இடம்பெற்றுள்ளது. அதாவது, மாணவர்களுக்கு ஏற்புடைய மற்றும் அவர்களுக்குப் புரியும்வகையிலான மொழியைப் பயன்படுத்துதல் என்ற கருத்துடன் தொடர்புடைய அம்சமாகக் கற்கும் பணிகளை மறுவடிவமைத்தல், அவற்றுடன் தற்போதைய வடிவங்களை மேம்படுத்துதல், புதிதாகக் கண்டறிதல் ஆகிய நிலைகளில் அறிமுகப்படுத்துதல் என்ற கருத்தும் இடம்பெறுகிறது.

மாணவர்களுக்கு ஏற்புடைய மற்றும் அவர்களுக்குப் புரியும் வகையிலான மொழியைப் பயன்படுத்துதல் என்ற கருத்துடன் தொடர்புடைய அம்சமாகக் கற்கும் பணிகளை மறுவடிவமைத்தல், அவற்றுடன் தற்போதைய வடிவங்களை மேம்படுத்துதல், புதிதாகக் கண்டறிதல் ஆகிய நிலைகளில் அறிமுகப்படுத்துதல் என்ற கருத்தும் இடம்பெறுகிறது.

தமிழைக் கற்பது மற்றும் அதைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் ஒன்றாக, வகுப்பறைப் பாடங்கள் விருப்பமாக இல்லாதிருப்பதும் வகுப்பறைக்கு வெளியே பயன்படுத்த ஏற்றனவாக

இல்லாதிருப்பதும் முக்கிய இடம் பெறுகின்றன. ஒருங்கிணைந்த பாடத்திட்ட வடிவத்தைப் பயன்படுத்துவதன் வாயிலாக, பணி அடிப்படையிலான பாடத்திட்டத்திற்கு (task-based lessons/curriculum) வழிவகுக்கும். இத்தகைய புதிய அணுகுமுறையில் இலக்கணம் கற்பித்தல் என்பது மையமாக அமையாது. ஏனெனில், தேவையான இலக்கணத்தை மாணவர்கள் தாமாகவே கைவரப்பெற்றுவிடுவர். இந்தப் பணிகளைச் செய்யும்போது இலக்கணம் அவர்களுக்குக் கிடைக்கும். மேலும், இத்தகைய பணிகள் மாணவர்களை உற்சாகப்படுத்துவதுடன் பொருள்பொதிந்த தொடர்பை நிகழ்த்த வழிவகுக்கும். பணிகள் என்று கூறும்போது, ஒரு விடுகதைக்குப் பதில் கண்டுபிடித்தல், ஒரு பிரச்சினைக்குத் தீர்வு கண்டுபிடித்தல், சிறாங்கூன் சாலைக்குப் போய் ஒரு பொருள் வாங்கிவருதல், காய்கறிக்கடையில் தங்கள் குடும்பத்திற்காகக் காய்கறி வாங்கிவருதல் என்று அமைதல் வேண்டும். இதன் வழியாக மொழியைத் தினசரி வாழ்வுக்குப் பயன்படுத்த இயலும் (ரிச்சர்ட்ஸ், 2001).

ஆசிரியவியல் மற்றும் பயிற்சி குறித்த ஆய்வு மையத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் ஆசிரியவியல் (Tamil Pedagogy) குறித்த ஆய்வில் (Shegar & Ridzuan, 2005), மாணவர்களுக்கு நீடித்த பேச்சும் எழுத்தும் (sustained speaking/writing) அமைய வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருப்பதாகவும், குழு நடவடிக்கைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. கற்கும் பணிகளை மாணவர்கள் அவர்களது மொழித்திறன்களை நோக்கிச் செலுத்தாது மாணவர்கள் தம் தினசரி வாழ்வில் எதிர்நோக்கும் அவசர மற்றும் அத்தியாவசியச் சூழ்நிலைகளுடன் தொடர்புடையனவாக அமைக்கும்போது பயன்கள் அதிகமாக இருக்கும்.

தேசியக் கல்விக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் (சீதாலட்சுமி மற்றும் பலர், 2005) இடம்பெற்ற நோக்கக்குழுக்கள் சார்ந்த கலந்துரையாடல்களின்போது, தமிழ்ப் பாடங்களில் நாடகம், 'டோஸ்ட் மாஸ்டர்ஸ் கிளப்' (Toast masters Club) போன்ற நடவடிக்கைகளை இடம்பெறச் செய்வது குறித்த சிந்தனைகளும் இடம்பெற்றன. கல்வியியல் ஆய்வாளர் மடோனா ஸ்டின்ஸன் (Madonna Stinson) அறிமுகப்படுத்தியுள்ள படிநிலை நாடகம் (Process Drama) என்பது அதன் இறுதித் தயாரிப்பைப் (final product) பற்றி மட்டுமின்றி அதன் படிநிலைகள் (processes) குறித்தும் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து சிந்திப்பது, செயல்படுவது என்பன நோக்கியும் அமைகிறது. இத்தகைய படிநிலை நாடகம், மாணவர்களின் சுயதிறமைகளைக்

காப்பதுடன், வாய்மொழி நடவடிக்கைகளுக்கு ஏற்ற மகிழ்ச்சிகரமான காரணங்களையும் வழங்குகிறது. இந்த அணுகுமுறை, கூறியதுகூறல், பயிற்சி மற்றும் தயாரிப்பு ஆகியவற்றுக்கான ஒரு சூழலை வழங்குகிறது (Stinson, 2005; Stinson & Wall, 2003).

முதுகலைப் பட்ட வகுப்பிற்கான இரண்டாம் மொழிக் கற்பித்தல் குறித்த பாடநூலில் இப் பணிசார்ந்த அணுகுமுறை தொடர்பாகப் பல ஆய்வுகள் நடைபெறுவதை அறியமுடிகிறது. இந்த ஆய்வுகள், பணிசார்ந்த அணுகுமுறையில் இடம்பெறும் பின்னணி, கற்பவர்தம் மொழிச்சரளம், துல்லியத்தன்மை ஆகியவை பற்றியும் கற்றல் கற்பித்தலில் அவற்றின் தாக்கமும் குறித்து நடைபெற்றுவருகின்றன.

பணிசார்ந்த அணுகுமுறையில் எவை அதிகமாக இடம்பெறும்

உண்மை வாழ்வு சார்ந்த அம்சங்கள் பணிசார்ந்த அணுகுமுறைகளில் முக்கிய இடம்பெறுகின்றன. உண்மைவாழ்வில் மக்கள் செய்யும் ஆயிரக் கணக்கான செயல்கள் இதில் இடம்பெறும். வீட்டிற்கு வண்ணமடித்தல், காலணி வாங்குதல், சட்டை போடுதல், பொருள்களை அவற்றுக்கான வழிமுறைகள்படி இணைத்தல், பிரித்துப் புதுவிதமாக ஆக்குதல் என வீட்டில், பணியில், விளையாட்டில் மற்றும் இவற்றுக்கு இடையே இடம்பெறும் அனைத்தும் இதில் அடங்கும் (Long, 1985: 89).

இந்த அணுகுமுறையில் பணி என்பது ஒரு பொருள் தொடர்பானதாக இருக்கும். அந்தப் பொருள் என்பது மிக முக்கியம் என்ற நிலையில் இது ஒரு நடவடிக்கையாகும். உண்மை வாழ்வுடன் இதற்கு எவ்வகையிலாவது தொடர்பு இருக்கவேண்டும். பணியை முடிப்பது என்பது இங்கு, ஒரு முன்னுரிமையாக உள்ளது. இதை மதிப்பிடுவது, பணி எப்படி நடை பெற்றுள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது (Skehan, 1996: 38). இத்தகைய பணிகளில் வழக்கமாகச் சில தரவுகள் இடம்பெறும். எடுத்துக்காட்டு: பேசுதல்/படிப்புப்பகுதி/படங்களை வரிசைப்படுத்துதல் ஆகியவை.

இரண்டாம் மொழி வகுப்பில் பலவிதப் பனுவல்களைத் தந்து மாணவர்கள் பலவற்றிலும் திறம் பெறுவது, பல பனுவல்வகைகள் பற்றி அறிவது அவசியம் (நூனன், 1989). பணி அருமை, பணி சார்ந்த அம்சங்கள், பணி திட்டமிடல், பணி மேம்பாடு, துல்லியத்தன்மை ஆகிய இவை யாவும் இணைந்து வரும் கற்றல் விளைவுகளைத் தரும்.

பணிசார்ந்த அம்சங்கள் எனும்போது அது திறந்த நிலைப் பணியா, மூடிய நிலைப் பணியா, ஒரு வழிப் பணியா அல்லது இரு வழிப் பணியா, உள் நோக்கிய பணியா அல்லது வெளி நோக்கிய பணியா என்ற அடிப்படையில் அதன் தன்மை அமையும். இங்கு, இடைவினையாடல் என்பது அடிப்படை அம்சமாக இடம்பெறும். எனவே, பணிகள் என்பன மாணவர்களின் மொழியோடு தொடர்புடையதாக, மொழியில் அவர்கள் தொடர்புகொள்வதை வசதிசெய்வதாக இருக்கவேண்டும். அதேபோல், ஒரு பாலினர் பங்கேற்பதா அல்லது இரு பாலினர் இணைந்து பங்கேற்பதா என்று நோக்கும்போது மாணவர்களின் ஆளுமைத் திறன்கள், கற்றல் விளைவுகளாக அமையும்.

பணி கடினத்தன்மை எனும்போது, கற்பவர்கள்தம் ஊக்குவிப்பு, ஊக்கம், அவர்களது தன்னம்பிக்கை, அறிவு, இரண்டாம் மொழியில் அவர்கள் கொண்டுள்ள திறமை, ஆகியவை முக்கியக் காரணிகளாக அமையும்.

மாணவர்கள் மீது இடம்பெறும் பல்வேறு தாக்கங்கள் அவர்கள் இத்தகைய பணிகளைச் செய்ய அடிப்படையாக அமையும். பணிகள் எனும்போது, பாடம், கற்பவர்மீது எதிர்பார்க்கப்படும் விளைவுகள் ஆகியன மிக அவசியம். இவற்றின் அடிப்படையில்தான் பணிகள் அமைக்கப்பட்டு மதிப்பிடப்படவேண்டும்.

இருவழிப்பணிகளில் ஒருவர் மற்றவரிடம் தகவல் எடுக்கும்போது, அங்குக் கூறியது கூறல், சோதித்தல் ஒன்றை விரிவுபடுத்துதல், உறுதிப்படுத்தல் போன்றவை அமையும். இங்கு இயல்பு மொழியாளர், இயல்பு மொழியல்லாதார் இணைந்து செயல்படும்போது பணி பொருத்தமானதாக அமையும். எடுத்துக்காட்டு, நாசிலமா எனும் மலாய் உணவுவகை மற்றும் அடை பற்றி ஓர் இணை பேசுதல் (ஒருவர் இயல்புமொழியாளராகவும் மற்றவர் அவ்வாறில்லாதவராகவும் அமைந்து தத்தம் அனுபவங்களைப் பகிர்வர்).

ஒரு படத்தைச் சிறிய அளவிலான மாற்றத்துடன் இருவர் கைகளில் வைத்துக்கொண்டு பேசும்போது பிரச்சினை தீர்க்கும் பணியை அமைத்துத் தரலாம். நிலவரைபடத்தைக் கொண்டு இருவர் தாம் செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லும் பாதை குறித்துப் பேசலாம். இவ்வாறு உண்மை வாழ்க்கையுடன் தொடர்புடைய அம்சங்கள் குறித்து விவாதிக்கவும் செய்யலாம்.

மூன்றாம் அம்சம் எனும்போது குறிப்பிட்ட சில மறுபயனீடு இருத்தல் இங்கு அவசியமாகிறது. அதாவது, குறிப்பிட்ட அளவுக்குப் பேசுவது,

குறிப்பிட்ட மொழியியல் அம்சங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல் ஆகியன இடம்பெறுதல் இன்றியமையாதது.

நான்காவது, ஒன்றுடன் ஒன்று இணைந்து நடைபோடுதல். இங்கு, பணிகள் பொருத்தமாக அமையும்போது தொடர்பைத் தரும். பணி சார்ந்த அணுகுமுறையில் மொழிகளின் வழியே பணிகள் நடைபெறும் சாத்தியங்கள் உள்ளன. பணிசார்ந்தது என்பது விளைவு சார்ந்தது அல்ல. இது ஒரு பனுவலைப் படித்தது சார்ந்த அறிவை நிரூபிக்குமாறு கூறாது தாம் அறிந்த தகவல் அடிப்படையில் மற்றொரு பணியை மேற்கொள்வது பற்றியதாகும்.

பொருளைத் தொடர்ந்து சரி செய்யும் நிலையில் தாம் கொண்ட பொருளைச் சரிசெய்தல் என்ற முறையில் மொழியில் அமையும் பணிகள், மொழியைப் பயன்படுத்துவதை அதிகரிக்க உதவுகின்றன.

ஒரு கதைக்குத் தரும் முடிவு, ஓரிடத்துக்குச் செல்லப் பாதை கூறுதல் ஆகியவற்றை எடுத்துக்காட்டுக்குக் குறிப்பிடலாம். இந்தப் பணிகளில், பங்கேற்கும் இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதற்கு மொழியின் உதவி மிக அதிகமாகத் தேவைப்படும்.

தேசியக் கல்விக்கழகப் பணிக்கு முந்திய பயிற்சியில் பணிசார்ந்த அணுகுமுறை

தேசியக் கல்விக் கழகத்தில் கடந்த பருவத்தில் இத்தகைய பணிசார்ந்த அணுகுமுறை மொழிக் கற்பித்தல் சார்ந்த பாடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. அவர்கள் பண்பாடு சார்ந்த பணிகளில் அதிகமாக ஈடுபடுத்தப் பட்டனர். அவ்வகையில், பின்வரும் பணிகளில் ஈடுபட்டனர். அவைவருமாறு:

- பூ கட்டுதல்
- கோலம் போடுதல்
- சமையல் நிகழ்ச்சிகளைப் பார்த்துச் சமையல் செய்தலைப் பற்றிப் பேசுதல்
- சமையலும் மருத்துவமும் தொடர்பான கருத்துகளைக் கேட்டுவந்து பகிர்தல்
- உறவுப்பெயர்களும் அவற்றின் இன்றியமையாமையும்
- பழமொழிகளும் உறவுப்பெயர்களும்
- பொங்கலும் பண்பாடும்
- நோன்புத்திருநாளும் பண்பாட்டு அம்சங்களும்

- சிங்கப்பூரிலும் தமிழகத்திலும் சில பண்டிகைகளும் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் அமையும் விதம்

இத்தகைய பணிசார்ந்த நடவடிக்கைகளில் முதல்மொழியாகத் தமிழ் பேசும் வீட்டில் உள்ள மாணவ ஆசிரியர்களும் மூத்த குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட மாணவ ஆசிரியர்களும் பயிற்சி அளித்த விரிவுரையாளருடன் வசதியாளராக அமைந்து பல அரிய செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். இதன் வாயிலாக அவர்கள்தம் தன்னம்பிக்கையையும் கூடுதல் செய்தி களையும் மற்ற மாணவ ஆசிரியர்கள் அறிய முடிந்தது. மேலும், அவர்கள் தம் இல்லம் மற்றும் சமூகம் சார்ந்த செய்திகளையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டதால், வகுப்பில் உள்ள பிற பெண் மற்றும் ஆண் மாணவ ஆசிரியர்களுக்கு அவர்கள் பலவகைகளில் முன்னுதாரணங்களாக விளங்கியதையும் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றதையும் உணர முடிந்தது. இது, அவர்கள்தம் ஆசிரியர் பணியில் தாம் செயல்படுத்திப் பார்க்க உதவியாக அமையும் என்று கருத்துத் தெரிவித்தனர். மேலும், வளர்ந்த பிள்ளைகளான தங்களுக்கே இந்த நிகழ்ச்சி மிகவும் சுவாரசியமாக இருந்தது என்றால் தங்களுடைய எதிர்காலப் பள்ளிமாணவர்களுக்குக் கற்பிக்கும்போது இன்னும் பயனுடையதாக இருக்கும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். இது, விரிவுரையாளரும் அடுத்த நிலைக்கு அவர்களை இட்டுச்செல்லக் கிடைத்த சமிக்ஞையாக அமைந்தது. இங்கு, தேசியக் கல்விக் கழக ஆய்வில் (சீதாலட்சுமி மற்றும் பலர்) மாணவர்களிடம் மேற்கொண்ட நோக்கக்குழுக் கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் கருத்துகளை ஒப்புநோக்குவது பயனுடையது. அம்மாணவர்களில் சிலர், தாங்கள் இன்றைய நிலையில் தமிழில் மாறுபட்ட கற்பித்தலையும் மனமகிழ்ச்சியுடன் கூடியவகையில் அமைந்த கற்றலையும் விரும்புவதைத் தெரிவித்தனர். மேலும், அவர்கள் கருத்திலிருந்து, இப்போதுள்ள கற்பித்தல் முறை பல சமயங்களில் அவர்களுக்கு மிகவும் சவாலாக இருப்பதால், பிற பாடங்களில் உள்ளது போன்ற துடிப்பான பாடங்களை அவர்கள் விரும்புவதைத் தெளிவாக உணர முடிந்தது.

ஒரே இடத்தில் அசையாமல் இல்லாமல் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என அவர்களுடைய எதிர்பார்ப்புகள் இருந்தன. இதிலிருந்து பணிசார்ந்த அணுகுமுறை வாயிலாகக் கற்பது அவர்களுக்கு மிகவும் விருப்பமாக இருக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளோம்.

மாணவர்கள் ஒளிப்படம், வீடியோ, ஆடியோ கணினி, அசையும் படங்கள், அசையாப்படங்கள், நிற அடிப்படையில் சின்னங்கள் என்ற வகையில் அவர்கள் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய சூழலில் இருப்பதால் அவர்களுடைய பாடங்களும் பலவகை மாதிரிகளாக (Multi Model) இருந்தால் அதன் மூலமாக அவர்கள் உண்மையான உலக வாழ்க்கையை வகுப்பறையில் பயிற்சி செய்து பார்க்க வசதியாக இருக்கும் என்ற விருப்ப நிலையில் அவர்கள் இருப்பதை நாம் அறிய முடிகிறது. நோக்கக்குழு கலந்துரையாடலில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், கல்வி அமைச்சு அதிகாரிகள், தொடக்கப்பள்ளி மாணவர்கள், உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களிடம் கேட்கும்பொழுது அவர்கள் சொன்ன கருத்துகளிலிருந்து பணிசார்ந்த அணுகுமுறையை எப்படி கல்விக் கழகத்தில் நாம் பயன்படுத்த முடியும் என்று முன்பு முடிந்த பருவத்தில் (January -April, 2007) இக்கட்டுரையாளர் செயல்படுத்திப் பார்த்தார்.

பணிக்கு முந்திய மற்றும் பணியிடைப் பயிற்சிகளில் பணிசார்ந்த அணுகுமுறை

தேசியக் கல்விக் கழகத்தில் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்திய போது பாரம்பரியமான செய்தியைத்தான் முதலில் எடுத்துக் கொண்டோம். ஏனெனில் தெரிந்த செய்தியிலிருந்து ஆரம்பித்து மெல்ல மெல்ல அதற்குக் கனம் கொடுப்பது என்பது முக்கியமான ஒன்றாகும். அவ்வகையில் கல்விக் கழகத்தில் மாணவ ஆசிரியர்களிடம் முயற்சி மேற்கொண்டோம். அப்போது மாணவ ஆசிரியர்கள் அந்தப் பணியை மேற்கொள்ளும்போது அதாவது கோலம் போடுதலோ, பூ கட்டுதலோ, ஒரு பொருளைப் பொட்டலம் கட்டுதலோ, ஒன்றைச் சமைத்தலோ, சமையலுக்கு உதவும் கீரையை அலசுதலோ – இவை அனைத்திலும் அதைப்பற்றி வரக்கூடிய சொற்களைத் தவிர ஏற்கெனவே வந்த மொழியைப் பயன்படுத்திப் பணியைச் செய்யவில்லை. பணி செய்யும்போது அவர்கள் பேசிய மொழிப்பகுதிகளைக் கேட்டபோது, அவர்கள் தாம் மேற்கொண்ட வேலை தொடர்பான செய்திகளைத்தாம் பேசினர். மேலும், அங்கு, ஒரு குடும்பத்தினரைப்போல மன மகிழ்ச்சியுடன் மற்றும் உரிமையுடன் அவர்கள் உரையாடி வேலை செய்ததைக் கண்கூடாகப் பார்க்கமுடிந்தது. விரிவுரையாளரான நானும் அவர்களுடன் ஒருவராக என்னை இணைத்துப் பணியில் பங்கேற்றது எனக்குப் பல அரிய செய்திகளை அறிய வழிவகுத்தது. அவர்கள் தரமான பேச்சு மொழியைப் பயன்படுத்தியுள்ளார்கள். பணியோடு தொடர்புடைய சில பழமொழிகளையும் மரபுத் தொடர்களையும் பயன்படுத்தி

யிருந்தனர். கோலம் என்று வரும்போது, "பூக்கோலம், புள்ளிக்கோலம், தாமரை, வண்ணம் அடித்தல், ஒன்பது புள்ளி, மூணு புள்ளி, கோலம் போட்டுதான் ஆவணும், சங்குக்கோலம், புள்ளி வச்சாத்தான் கோலம் போடமுடியுமா? இப்டிப் போயி இப்டிப் போயி கோலம் போடணும்" என்று பல்சுவை நிறைந்த சொற் கோவையைப் பயன்படுத்தியிருந்தனர். இடையில் மிகக் குறைந்த அளவில் ஆங்கிலச்சொற்களைப் பயன்படுத்தினர். அவற்றைப் பேசும்போது அவர்கள் பயன்படுத்திய குரல் ஏற்ற இறக்கம், சரளம் ஆகியவை வீட்டில் பேசுவதைக் கேட்பதுபோன்ற உணர்வை வழங்கின. இங்கு வழக்கமாகப் பாடநூலில் இடம்பெறும் எழுத்துத்தமிழைப் பயன்படுத்தாது தம் தினசரி வாழ்வில் பயன்படுத்தும் பேச்சுத்தமிழ் பாடம் முழுவதும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. அந்தப் பேச்சுத்தமிழும் அவர்களது பண்பாட்டு அறிவைப் பெறவும், பெற்றதைப் பகிர்ந்துகொள்ளவும் உண்மைவாழ்வுடன் தொடர்புபடுத்திப் பார்க்கவும் பேருதவியாக அமைந்தது.

சில மாணவ ஆசிரியர்கள் பாரம்பரியச் செய்திகள் அதிகம் தெரிந்தவர்களாக இருந்தார்கள். அதாவது ஏதேனும் ஓர் உறவுப் பெயர் பற்றிக் கேட்டால் ஐந்தாறு தலைமுறைகளுக்கு அந்த உறவுப் பெயர்களை எப்படி சொல்லலாம் எனத் தெரிந்து வைத்துள்ளார்கள். அப்படிப்பட்டவர்கள் அங்கு ஓர் ஆசிரியராக இருப்பதற்கு இந்தப் பணி சார்ந்த அணுகுமுறை வழிவகுக்கிறது. அத்துடன், அறிவு என்பது அவர்களிடையே உருவாவதுடன் மறுநிலைக்கு மேம்பட இங்கு வழியுண்டாகிறது. இங்கு மாணவர்கள், இலக்கணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பணி தொடர்பான இடைவினையாடல் தொடர்ந்து நடைபெறுகிறது. இவர்கள் வகுப்பறைக்கு வெளியில் சென்றாலும் இவ்வாறேதான் பேசுவார்கள். அவர்கள் அதற்காக ஒரு புது மொழியைப் பயன்படுத்த மாட்டார்கள்.

இதில் ஈடுபட்ட மாணவ ஆசிரியர்கள் இப்பணி தமக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகக் கூறினார்கள். தாங்கள் வளர்ந்தவர்களாக இருக்கும்நிலையில் இவ்வளவு மகிழ்ச்சியாக உள்ளதென்றால் மாணவர் களுக்கு இது மிகவும் மகிழ்ச்சியாகவும் பயனுடையதாகவும் இருக்கும் எனக் கூறினார்கள்.

தேசியக் கல்விக் கழக வகுப்பில் மாணவர்கள் மொழியைத் தன்னம்பிக்கையோடு பேச முன்வந்தார்கள். அத்துடன், பங்கேற்பவர்களுக்கு இடையிலான இடைவினையாடல்வழி மட்டும் நடைபெறும் நோக்கத்தைக் கொண்ட, இடைவினையாடலை வடிவமைக்கும் மற்றும் வரிசைப்படுத்தும்

அமைப்பு முறை உடைய தொடர்புக்கு உதவும் பொருள் பரிமாற்றத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு வகுப்பறை நடவடிக்கை/பயிற்சி எனக் குறிப்பிடும் போக்கையும் காண முடிந்தது. சில பணித்திட்டங்களை நிகழ்த்துவதற்காக நோக்க மொழியில் (Target Language) கருத்துகளைத் தொகுத்து ஒன்றை எதிரொலிப்பது அல்லது உருவாக்கும் /எடுத்துரைக்கத் தேவையான அம்சங்களைக் கற்றுக் கொள்வதற்கு இது உதவியாக இருந்தது (Lee, 2000).

இதற்கு உதாரணமாக வேறு சில பணிகள் எனப் பார்த்தால் இன்றைய சூழ்நிலையில் வெளியூரிலிருந்து/வெளிநாட்டிலிருந்து வரும் உறவினர்களுக்கு ஓட்டல்களில் அறை ஒதுக்கித்தருவது எனக் கூறும்போது நாம் சில ஓட்டல் பெயர்களைக் கொடுத்தால் மாணவர்கள் இணையத் தளத்திற்குச் சென்று அந்த உறவினருக்குத் தகுந்தவாறு அதாவது அவர் சைவ உணவு சாப்பிடுபவர், வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்பவர் என்பது போலச் சில செய்திகளைக் கூறி அவருக்கு ஏற்றாற்போல ஒரு தங்குமிட விடுதியைத் (ஓட்டலை) தேடுங்கள் எனச் சொன்னால் அவர்கள் இணையத்தின் வழியாக அதைத் தேடுதல் போன்ற நடவடிக்கையை மேற்கொள்ளலாம். நமக்குப் பல செய்திகள் ஆங்கிலத்திலேயே கிடைத்தாலும் அவற்றையும் நாம் பேச்சுத் தமிழில் பயன்படுத்தலாம்.

பணி சார்ந்த அணுகுமுறையில் ஒன்றைப் பற்றி மாணவர்கள் அதிகமாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஆண் பெண் என்ற பாகுபாடில்லாமல் அவர்கள் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டாகிறது. நாம் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தும் பல பொருட்களைப் பாடத்திற்குப் பயன்படுத்தி அதன்மூலம் நிறையப் பேசலாம். பூக்கள் எனச் சொல்லும்போது, பூக்களின் சிறப்புகள், பண்பாட்டில் அவை பெறும் இடம், இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் அவை குடும்பங்கள் முன்னேற எப்படி உதவி செய்கின்றன? இந்தியப் பண்பாடுகளில் எப்படி பூ பயன்படுகிறது என்ற இடைவினையாடியபடி அடுத்தடுத்த படிநிலைக்குப் போகும்போது ஒரு பொருள் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள வாய்ப்புண்டாகிறது. கற்கும் மாணவர்களின் வயதிற்குத் தகுந்தவாறு பணியினுடைய கடினத்தன்மையை அதிகமாக்கிக் கொண்டு போகும்போது உலகளாவிய நிலையில் தன்னுடைய பண்பாட்டைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கிறது. மேலும் அதைப்பற்றி எடுத்துச் சொல்லுவதற்கு இதுபோன்ற சந்தர்ப்பங்கள் முறையான கற்பித்தல் மூலமாக அல்லாமல் முறைசாராத கற்பித்தல் வாயிலாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகிறது.

பணியிடைப் பயிற்சியிலும் இத்தகைய பணி சார்ந்த அணுகுமுறை என்பது பேச்சுத்தமிழைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாகக் கற்றுத்தரப்பட்டது. அப்போது இடம்பெற்ற சில பணிகளில் ஒன்றாக வெளியூருக்குச் செல்லுமுன் இடம்பெறும் முன்தயாரிப்புகள் குறித்துப் பேசப்பட்டது. இங்கே ஆசிரியர்கள் சிலரது கருத்துகளைப் பார்ப்போம்:

ஆசிரியை 1– "நாங்க வந்து குடும்பத்தோட பேசுவோம், எந்த எடம்னு மொதல்ல எடத்த முடிவு செய்வோம் குடும்பமா ஒக்காந்து. பிறகு வந்து அந்த நாள் நெருங்கும்போது அவங்கவங் களுக்கு ஒரு List போடச் சொல்வோம். என்ன பொருள் தேவை, எதெல்லாம் நீ எடுத்துட்டுப் போணும், எதெல்லாம் ஒனக்கு வேணும்? அதெல்லாம் அதுங்க List பண்ணுங்க. பிறகு ஆளுக்கு ஒரொரு bag கொடுத்துடுவே(ன்). அந்த bagல அதெல்லாம் எடுத்து வச்சிட்டு அதுங்க tick போட்டுக்குங்க. மற்ற முக்கிய மானது இப்ப டாக்டர்ட்ட போய் மருந்து வாங்கறது... ஆளுக்கு ஒரு ஒரு வேலையா பாப்போம்."

ஆசிரியை 2 – "passportலாம்?"

ஆசிரியை 1–– "முன்னயே அதெல்லாம் check பண்ணிக்குவோம். அது அப்பறமா அவங்க அப்பாதா(ன்) பாப்பாங்க. எல்லாம்."

ஆசிரியை 2 – "முக்கியமான வேலலாம் தலைவர்தா(ன்) எப்பவும் செய்வார்."

ஆசிரியை 1 – "actually இது வந்து ஒரு ஏழு எட்டு வயசு உள்ள மாணவர்களா இல்ல kinter garden லேருந்து...?"

ஆசிரியை 2 – "அவங்க வீட்டுல சொல்றாங்க."

ஆசிரியை 3– "நம்ம வீட்டுல செய்றதுதான்."

ஆசிரியை 1 – "நம்ம வீடா சரி."

ஆசிரியை 3– "தேவையான பொருள்கள் வாங்கணும். அங்க போயி இன்னெஇன்ன பொருள்கள் souvenier அது இது தனியா ஒரு list போட்டு வச்சிக்குவேன். அந்த மாதிரிதான் எங்க பயண ஏற்பாடு."

ஆசிரியை 4 – "என்னுடைய பயண ஏற்பாடு கொஞ்சம் புதுமையா இருக்கும். அதாவது documents வரும்போது அதை வந்து நான் கவனித்துக் கொள்வேன். வந்து என்ன செய்வேன்னா பயணத்துக்கு முன்பு ஒரு நான்கு நாட்கள் யார் யாருக்கு என்ன பைங்கறத அந்தப் பையைத் தெறந்து வச்சிடுவேன், covering bag. So அதுல வந்து ஞாபகம் வரும்போது யார் யாருக்கு என்னென்ன பொருள் வேணுமோ அதப் போட்டு வச்சிரணும். so அது மாதிரி."

ஆசிரியை 2 – "பை காலியாவே இருக்கும்."

ஆசிரியை 3 – "காலின்னு தேவையில்ல அதாவது என்னுடைய அது வந்து கூட அவங்கவங்க அறையில அந்தப் பைய... அதனால வந்து அந்த மாதிரியான packing. ஆனா மருந்துன்னு வரும்போது அதை நான்தான் கவனித்துக் கொள்வேன், பிள்ளைங் களுக்கு. அப்பறம் packing final ஆ packing வந்து சரியாக்கறது என்னுடைய ரெண்டாவது மகன். என்னுடைய மூத்த மகன் வந்து he is good அது என்னான்னு சொன்னா ரொம்ப order பண்ணுவார், O.K. நீ இத எடுத்து வச்சியா? அத எடுத்துவச்சியா? அத செய்தியா? இத செய்தியா? அப்படி வரும்."

ஆசிரியை 2 – "Checker"

ஆசிரியை 3– "ஆனா கடைசியா finalஆ packing வந்து சரி பாக்கறது என்னோட மூத்த

மகன். So அந்த வகையில வந்து நாங்க சுற்றுலாப் பயணம் ஏதும் போறதா இருந்தா செய்றது... ஆனா அதிக தூரம் போனது கெடையாது.' ஒரளவுக்குப் பக்கத்துப் பக்கத்துல போயிட்டு வந்திருக்கோம்."

ஆசிரியை 2 – "ஆமா. ஆனா அதுக்குக்கூட எல்லாம் வேணுமே?"

ஆசிரியை 3– "ஆமா"

ஆசிரியை 2 – "ஒரு நாள் போனாலும் ரெண்டு நாள் போனாலும் எல்லாம் வேணுமே... தலையிலருந்து கால் வரைக்கும் போடறதுக்கு அதிதுக்கு எல்லாம் வேணும். நீங்க.."

ஆசிரியை 4– "நா வந்து குடும்பத்தோடதா போவேன். பயண ஏற்பாடுலாம் என்னுடைய brother in law தான் செய்வாரு எல்லாம். பிறகு வந்து... என்னுடைய packing நா (not clear) அது மட்டும். அப்பறம் வந்து மீதி பொருள்லாம் மொதல்லயே எடுத்து வச்சி, தயார் செய்து வச்சிடறதுதான். மத்த எல்லா ஏற்பாடும் அவர் செய்துடுவாரு."

ஆசிரியை 2 – "பரவால்ல எல்லா ஏற்பாடும் அவர் செய்றாரு. நீங்க..."

ஆசிரியை 5– "என்னோடதும் அவங்க மாதிரிதான். brother in law பயண ஏற்பாடுலாம் செஞ்சிடுவாங்க. ஆனா எனக்குத் தேவை யானது. என்னுடைய பெற்றோர்களுக்கு தேவையானது நா அவங்களுக்காகச் செஞ்சு கொடுப்பேன்."

ஆசிரியை 6– "அவங்க மாதிரிதான் list மொதல்ல list தான் மொதப் போடுவேன்".

ஆசிரியை 2– "ஓ..."

ஆசிரியை 6– "போட்டு என்னென்ன வேணும்
அதெல்லாம் எழுதிக்குவேன், அதுக்குப் பெறகு
ஒன்னொன்னா எடுத்து வைக்கறது."

இங்கு ஆசிரியர்கள் பேசும்போது சரளமாக இடம்பெறும் தமிழ்மொழியுடன் சிற்சில ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்துகின்றனர். அவை, எவ்வகையிலும் அவர்களது கலந்துரையாடலையோ சிந்தனைப் போக்கையோ தடை செய்யவில்லை என்பதுடன் அதிகமாகத் தமிழில் பயன்படுத்தப்படாத சொற்களாகவும் உள்ளன. இவ்வாறு பல உரையாடல்களைத் தொகுத்து ஆய்வு செய்யும்போது, ஆங்கிலச் சொற்களின் பயன்பாட்டின் பின்னணியை உணரமுடியும். தொடர்ந்து, புதிய கற்றல் கற்பித்தல் உத்திகளைக் கண்டறிய முடியும்.

எளிமையான மொழியைப் பயன்படுத்துதல்

இதுவரை பாடநூல்களில் பல மாறுதல்கள் செய்யப்பட்டபோதிலும், மேலும் மேலும் அதிக எண்ணிக்கையுள்ள மாணவர் ஆங்கிலம் பேசும் குடும்பங்களிலிருந்து வருவதால், தமிழ்ப் பாடத்தைக் குழந்தைகள் கடினமானதாகக் கருதுகின்றனர். சான்றாகத் தேசியக் கல்விக் கழகத்தில் ஆசிரியவியல் குறித்த ஆய்வு மற்றும் பயிற்சி மையத்தின் ஆய்வுத்திட்டம் (சீதாலட்சுமி மற்றும் பலர்) ஒன்றில் நடத்தப்பெற்ற நோக்கக்குழு உரையாடலில் ஒரு மாணவர் தமது பாடநூல் பாடங்கள் கடினமாக இருப்பதால் அந்நூலைப் படிப்பதில் மகிழ்ச்சியடைவதில்லை என்று தெரிவித்தார். மற்றொரு மாணவர் தம் பாடநூலில் உள்ள படைப்புகள் குறித்துக் கருத்துரைக்கும்போது, அதில் உள்ள கதைகள் அனைத்தும் சலிப்புத் தருவனவாக உள்ளதால் தம் வகுப்புக்கு எதுவும் விளங்கவில்லை; சொற்கள் மிக நீண்டவையாகவுள்ளன. பொருள் அறியாமல் அவற்றை வெறுமனே படிப்பதாகத் தெரிவித்தார். ஆய்வு நடைபெற்ற காலத்தில் இடம்பெற்றிருந்த பாடநூலைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஒரு மாணவர், தெரிவித்த கருத்து வருமாறு: தொடக்கநிலை ஆறாம் வகுப்புப் பாடநூலில் கடையெழு வள்ளல்கள் பற்றி ஒரு கட்டுரை உள்ளது. இந்தக் கடையெழு வள்ளல்கள் 2000 ஆண்டுகளுக்கு முந்திய சங்க காலத்தவர் (பழங்காலம்). தொடக்கநிலை ஆறாம் வகுப்புப் பாடங்களுக்கு இது மிக அதிகமானது எனத்தாம் நினைப்பதாகவும் அத்தகைய பாடங்கள் உயர்நிலை வகுப்பு மூன்று அல்லது அதற்கு மேம்பட்ட உயர் நிலையில் அது அமைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ஊடக நோக்கக்குழுக் கலந்துரையாடலில் பங்கேற்றவரும் ஆசிரியர்களுக்கான நோக்கக்குழுக் கலந்துரையாடலில்

பங்கேற்றவரும் பழங்கால மன்னர்கள் குறித்த கதைகளில் இடம்பெறும் சொற்கள், அவற்றின் தற்காலப் பயன்பாடு ஆகியன குறித்துக் கருத்துரைத்தனர்.

நோக்கக்குழுக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஒரு மாணவன் தன் கருத்தைச் சுருக்கமாகத் தெரிவித்தான். பழங்காலக்கதைகளை நாம் சேர்க்கலாம். ஆனால் அவை சுவை மிக்கனவாக இருத்தல் வேண்டும். அதை நம் பேச்சுமொழிக்கு மாற்றலாம் என்று கருத்துரைத்தான்.

ஓர் உயர் மதிப்பை மனத்தில் பதியவைப்பதும், பண்பாட்டு இன உணர்வை உறுதிப்படுத்துவதும் நாம் தாய்மொழியைக் கற்பதன் குறிக்கோளாகும். புராணக் கதைகளையும், பழங்காலக் கதைகளையும் சேர்ப்பதால் நாம் இவற்றைப் பெறுதல் கூடும். பல சமயங்களில் இவை சுவை மிக்கனவாகவும் இருக்கலாம். ஆனால் இலக்கியப்பதிவுடன் கூடிய பொருத்த மற்ற பயன்பாடு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்க்குக் கற்றலைக் கடினமானதாக்கக்கூடும் என்ற கருத்து நோக்கக்குழுக் கலந்துரையாடலில் இடம்பெற்றது. மாணவர்கள், தங்களுக்கான பாடப் புத்தகங்களில் வயது சார்ந்த அம்சங்கள் பாடங்களில் இடம்பெறுவதை விரும்புகின்றனர். இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு இத்தகைய பாடங்கள் எளிதில் புரியும் தன்மைகள் உள்ளன. பழங்காலக் கதைகள் அல்லது வரலாற்றுச் செய்திகள் எனும்போது, படைப்புகளில் பயன்படுத்தப்பெறும் சொற்கள் எளிமையாக அமைவது நல்லது. ஏனெனில், அக்கதைகளையும் அவற்றில் பொதிந்துள்ள உயர்மதிப்புகளையும் அறிவதற்கு அதில் உள்ள கடினமான சொற்கள் தடுக்கின்றன என்பதைக் கருதியதாகத் தோன்றவில்லை. தற்போதுள்ள பாடநூல்களில் பதின்மூன்று முதல் பத்தொன்பது வயது வரையிலானவர்களின் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் விளக்கும் கதைகள் மிகச் சிலவே உள்ளன என்பதே. ஆங்கிலத்தில் மாணவர் தேர்ந்தெடுப்பதற்கு மிகப்பெரிய அளவிலான பல்வேறு வகைப்பட்ட மூலநூல்கள் உள்ளன. அதே நேரம், தமிழ்ப்பாடநூல் எழுதுவோர்க்கு இது ஒரு பெரும் சவால் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனினும், அவர்கள் சவாலை எதிர்கொள்ளும் நிலைக்கு உயர்ந்து, தற்காலத்துக்கு உரியதாகவும், சுவைமிக்கதாகவும், பொருத்தமானதாகவும் உள்ள பாடப்பொருளை வழங்குவதுடன், மரபையும், உயர்மதிப்புகளையும் தற்காலப் பிரச்சினைகளுடன் இணைத்திட வேண்டும்.

ஆய்வில் முக்கிய இடம்பெற்ற நோக்கக்குழுக் கலந்துரையாடல்களில் மாணவர்கள் வகுப்பறையில் தமிழ் கற்க ஏதுவாகப் பேச்சுத்தமிழ்

அறிமுகப்படுத்தப்பட்டுப் பின்பு எழுத்துத்தமிழ் அறிமுகப்படுத்தப்படுவது ஏற்புடையது என்ற கருத்துத் தொனிக்கும் வகையில் பலரும் தம் கருத்துகளைத் தெரிவித்தனர். இங்கு எடுத்துக்காட்டப்பட்ட எடுத்துக்காட்டுக் கருத்துகளும், மாணவர்கள் அவர்கள் வாழும் உண்மை வாழ்வுடன் தொடர்புடைய அம்சங்களில் அதிக ஆர்வம் காட்டுவதுடன் அவற்றைத் தம் வாழ்வில் இணைத்துப் பார்க்க உதவியாக இருக்கும் என்ற கருத்தை உணர முடிகிறது. அதற்கு வழிவகுக்கும் வகையில் அமைகிறது பணிசார்ந்த அணுகுமுறை. இம்முறையில் பாடங்களை அறிமுகப்படுத்தும்போது, தொடக்க வகுப்புகளில் மாணவர்களின் வயதுக்கு ஏற்ற பணிகளைத் தரலாம். மேலும், தொடக்கநிலையில் பல மாணவர்கள் தமிழில் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருப்பதால், தரப்படுத்தப்பட்ட பேச்சுத் தமிழானது, மாணவர் தங்கள் குடும்பத்தினருடனும், சமூகத்துடனும் தமிழில் உரையாடும் வகையாகவும், எளிதில் தொடர்பு கொள்ளும் வகையாகவும் நடைமுறைவகை மூல வளமாகவும் தொடர்பு வளமாகவும் அமையும். மாணவர்கள் பேச்சுத்தமிழில் திறமை பெற்று, பின் உயர்நிலைக்கு மாற்றம் பெற்று இலக்கியத் தமிழுக்குச் செல்லத் தரப்படுத்தப்பட்ட பேச்சுத்தமிழ் ஒரு மேடைச் சட்டமாக அமையும். பள்ளிச் சூழ்நிலையிலும், வெளிச் சூழ்நிலையிலும் தரப்படுத்தப்பட்ட பேச்சுத்தமிழ் நன்கு பயன்படுத்தப்பட்ட பின்னர், தொடக்க நிலையில் இலக்கியத்தமிழ் வழங்கப்படுவது பயன்மிக்கதாக அமையும்.

அண்மையில் தேசியக் கல்விக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர்களும் மாணவ ஆசிரியர்களும் மலேசியாவின் ஸ்கூடாய் பகுதியில் உள்ள துன் அமினா தமிழ் மாதிரித் தொடக்கப்பள்ளிக்குச் சென்றிருந்தபோது (சீதாலட்சுமி, 2008) கண்ட வகுப்பறைக் கற்பித்தல் புதிய சிந்தனையை எடுத்துக்காட்டியது. அங்கு நிரல்பட ஒரு செயலைச் செய்தல் என்ற கருத்தில் எப்படி 'மைலோ' பானத்தைக் கலக்குவது, முட்டையை எப்படிப் பொரிப்பது, பூச்செடியை எப்படி நடுவது என்பன போன்ற செயல்கள் வரிசைமுறைப்படி எவ்வாறு படிநிலை அமைப்பில் செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டன. இந்தப் பாடம் நான் ஆய்வில் ஈடுபட்டுள்ள பணிசார்ந்த அணுகுமுறையுடன் ஒத்துச்செல்வதை உணர முடிந்தது. ஆழமாகச் சிந்திக்கும்போது பணிசார்ந்த அணுகுமுறையின் கூறுகள் அப்பாடத்தில் இடம்பெற்றிருந்ததும் அதை நடத்திய ஆசிரியர் தம்மை அறியாமல் அந்த அணுகுமுறையின் சில அம்சங்களைப் பயன்படுத்தியிருப்பதும் நமக்குத் தெரிகிறது. இதுபோன்று பல வகைகளில் இந்த அணுகுமுறையின் கூறுகளை நாம் பாடங்களில் பார்க்கவியலும் என்பதுடன் அவ்வாறான கூறுகளை மேலும் செம்மைப்படுத்திப்

பாடங்களைக் கற்பிப்பது மாணவர்களுக்குத் தேர்வுக்கு மட்டுமின்றி வாழ்வுக்கும் பயன்படும் மொழியியல் மற்றும் வாழ்வியல் அறிவினை வழங்கும் என்பது திண்ணம்.

பணிசார்ந்த அணுகுமுறையில் மதிப்பீடு

பணிசார்ந்த அணுகுமுறையில் மதிப்பீடு எனப் பார்க்கும்போது அது எப்படிப்பட்ட பணி என அவர்கள் மதிப்பிடலாம். நாம் பல பணிகளைக் கொடுக்கும்போது அவர்கள் எதைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதிலிருந்து அதைப் பார்க்கலாம். பணியைத் திட்டமிடல், பணிநிமித்தமாக அவர்கள் எப்படிப்பட்ட உரையாடலை நிகழ்த்துகிறார்கள். ஒருவருடைய கருத்துக்கு இனனொருவர் எப்படி பதில் தெரிவிக்கிறார்கள். ஒருவர் கருத்துக்கு மற்றவர் பதில் தெரிவித்தல், கூடுதல் விளக்கம் தரல், பயன்படுத்தப்படும் மொழிப்பாங்கு, அதாவது நாம் பேசக்கூடியவரின் வயது போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு பேசுகிறார்களா எனப் பார்ப்பது, மொழியை எப்படி பயன்படுத்துகிறார்கள், வீட்டில் பயன்படுத்தும் மொழிப் பாங்கைப் பயன்படுத்து கிறார்களா, கேட்பதற்குப் பொருத்தமில்லாத மொழிப் பாங்கைப் பயன்படுத்து கிறார்களா, தொடர்புத்திறன்கள் அதாவது பலதுறை நுண்ணறிவுகள் வழியாகச் சொற்கள் பேசாமலே சில செய்திகளை நடத்தலாம், சிலர் அந்தக் குழுவிற்குள்ளாகவே ஒரு சுமூகமான தன்மையை எப்படி மொழி மூலமாக உருவாக்குகிறார்கள். தான் கருதுவதை எப்படி பிறர் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைக்கிறார்கள் எனப் பல அம்சங்கள் அடிப்படையில் மதிப்பிடலாம்.

புதிய மதிப்பீடுளையும் நாம் முக்கியத்துவம் தந்திடும் திறன்கள் அடிப்படையில் உருவாக்கலாம். நம் தமிழ்ப்பாடங்களில் பலவகை நடவடிக்கைகளை நாம் அறிமுகப்படுத்தியிருந்தாலும், ஒரு முறையான படிநிலைத் தொகுப்புடன்கூடிய இவ்வணுகுமுறை அங்குத் தமிழில் ஓர் ஆரம்பமே. இன்னும் ஓராண்டில் இதன் வளர்ச்சி, பல புதிய அனுபவங்களை நமக்கு வழங்கும் என்பது நமது நம்பிக்கை மற்றும் உறுதி. வயது குறைந்த மாணவர்கள் எனும்போது அவர்கள் மொழியைப் படிக்கவில்லை, அவர்கள் மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள், அடுத்ததாக அவர்கள் சமூக ஒற்றுமை, ஒருங்கிணைந்து கற்றல் என்பதை அந்தப் பணி சார்ந்த அணுகுமுறை அவர்களுக்கு உதவி செய்கிறது. ஆசிரியர்கள் பிழைகளைத் திருத்த மாட்டார்கள், மாணவர்களே சரிசெய்து கொள்வார்கள். வகுப்பில் ஒன்றுகூடல் என்பது இயல்பாக இருக்கும். பாடம் என்பது கடினமாக

இருக்காது. மாணவர்களை ஆழமாக நோக்கும்போது, தமிழில் இடம்பெறும் வெவ்வேறு வகையான 'க','ச','ப', 'த', 'ற'ஆகிய எழுத்துகளை உச்சரிப்பதில் மாணவர்களுக்கு எளிமை தெரிகிறது. 'எடுத்துக்காட்டுக்கு, தமிழை வீட்டில் பேசியறியாத மாணவர்கள், கடல் என்பதை, katal, dhedhi, pathill என்று சொற்களை உச்சரிக்கும்போது, kadal, thedhi, bhadhil என்று உச்சரிக்கின்றனர். இத்தகைய அணுகுமுறையில் மாணவர்கள் ஒருவருடன் ஒருவர் அதிகமாகப் பேசிச் சொற்களைச் செவிமடுக்கும்போது, கடல், தேதி, பதில் என்று எழுத்துகளைப் பார்க்கும்போது சரியான உச்சரிப்பில் உச்சரிக்க இந்த அணுகுமுறை உதவுகிறது. அதாவது நாம் நம் தினசரி வாழ்வில் பல எழுத்துகளைச் சரியாக உச்சரிக்க நமது பேச்சுமொழிப் புழக்கம் உதவுகிறது. அதனை இந்த அணுகுமுறையிலும் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.

நாம் ஒருவருடன் உண்மை வாழ்க்கையைப் பற்றிப் பேசும்போது அவருக்கு எவ்வளவு செய்தி தெரிந்திருக்கிறது எனத் தெரியும். அதை மதிப்பிடுவதற்கும் இந்த முறை உதவியாக இருக்கின்றது.

பணி சார்ந்த அணுகுமுறையில் மதிப்பீடு என்று நோக்கும்போது, தரப்பிரிவுகளின் அடிப்படையில் விளக்கங்களை உருவாக்கி மதிப்பிடல் அமையலாம். அத்தகைய தரப்பிரிவுகளில், பணியின் தன்மை, பணித் திட்டமிடல், பணி நிமித்தம் உரையாடுதல், ஒருவர்தம் கருத்துக்கு மற்றவர் பதில் தெரிவித்தல், கூடுதல் விளக்கம் தரல், பணியின்போது பயன்படுத்தப் படும் மொழியின் தன்மை, இடம்பெறும் தொடர்புத்திறன்கள் எனப் பல அம்சங்கள் அடிப்படையில் மாணவர்களின் வயது, வாழ்வியல் அனுபவம், பயிலும் வகுப்பு, அதன் தன்மை, பள்ளியின் நோக்கு மற்றும் போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கலாம்.

வாழ்க்கைக்கு நம்மைத் தயார்செய்யும் பணிசார்ந்த அணுகுமுறை

தினசரி வாழ்வில் நாம்செய்யும் பணிகளை வகுப்பறையில் பயன்படுத்தி மாணவர் பயிலும் தமிழ் வகுப்புகள் உலகியல் வாழ்விடமாக மாற வழி வகுக்கும் பணி சார்ந்த அணுகுமுறை தேர்வுக்கு நம்மைத் தயார்படுத்துவதைக் காட்டிலும் வாழ்க்கைத் தேர்வுக்குத் தயார்படுத்தும் தன்மை வாய்ந்தது என்பது தெளிவு. அது மட்டுமின்றி, இது மாணவர்களைத் தன் வயப்படுத்தித் தமிழிலும் வாழ்விலும் ஆர்வத்தை உண்டாக்கும் என்பது உறுதி. மொழிக் கற்பித்தலில் குறிப்பாக இலக்கணம் கற்பித்தலில் வடிவம் நோக்கிய ஆசிரியவியலுக்குப் (form focused pedagogy) பதிலாக மாணவர்களின்

மொழிச்சரளம் நோக்கிய ஆசிரியவியலுக்கு (fluency focused pedagogy) இந்தப் பணிசார்ந்த அணுகுமுறை அடிப்படையாக அமைகிறது (Richards, Jack C., 2001, 2002). சிறப்பான சரளத்துடன் கூடிய தொடர்புக்கு உதவும் இம்முறை தொடர்பாகத் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெறுவது இரண்டாம் மொழியாகத் தமிழ்க் கற்றலை மேம்படுத்தும்.

துணை நூல்கள்

கல்வி அமைச்சு. (2005). தமிழ் மொழிப் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியவியல் குறித்த மறுஆய்வுக்குழு அறிக்கை, சிங்கப்பூர்.

சீதாலட்சுமி. (2008). தேசியக் கல்விக்கழகத் தமிழ்த்துறையில் சக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களுடன் 31.1.2008 அன்று மலேசியாவின் ஸ்கூடாயில் உள்ள துன் அமினா தமிழ் மாதிரித் தொடக்கப்பள்ளியில் மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவின்போது இடம்பெற்ற தமிழ் வகுப்பில் பார்வையிட்ட தமிழ்ப்பாடம், மலேசியா.

Approaches to Teaching English as a Second Language. website: viewed on 22.12.2007. website: http://www.aubrun.edu/~nunnath/engl6240/fonf.html.

Jane Willis. 1996. A Framework for Tasked-Based Learning. London: Longman.

Jane Wills. 2000. Task-based Language Teaching: teachers' solutions to problems encountered, website: viewed on 23.12.2007. website: http://www.tesol-france.org/New/Documents/Colloque06/JaneWillsHandout.pdf

Krashan S.D. 1988. Second Language Acquisition and Second Langauge Learning Parentic - Hall International.

Kumaravadivelu.1991, Language - learning tasks: teacher intention and learner interpretation. ELT J.1991;45:98-107.

Marianne Celce Murcia (Editor). 2001. Teaching English As a Second or Foreign Language (3rd Edition), Heinle & Heinle: Thomson Learning.

Nunan, D. 1989. Designing tasks for the communicative classroom. Cambridge: Cambridge University Press.

Nunan, D. 2006. Task-based language teaching in the Asia context: Defining 'task', Asian EFL Journal, 8:3:1.

Prabhu, N.S. 1987. *Second Language Pedagogy*, Oxford, Oxford University Press.

Richards, Jack, C., Renandya Willy A. 2002. Methodology in Language Teaching: An Anthology of Current Practice. USA. Cambridge University Press.

Richards, Jack, C. Addressing the Grammar Gap in Task Work, In Richards, Jack, C. Renandya Willy, A. 2002. Methodology in Language Teaching: An Anthology of Current Practice. USA: Cambridge University Press. pp.153-165.

Richards, Platt and Weber, 1985. Longman dictionary of applied linguistics. London, Longman.

Seetha Lakshmi, Viniti Vaish and S. Gopinathan (with the assistance of Vanithamani Saravanan). 2005. A Critical Review of the Tamil Language Syllabus and Recommendations for Syllabus Revision (CRP 36/03 SL). Singapore, Centre for Research in Pedagogy and Practice, National Institute of Education, Nanyang Technological University.

Shegar, Chitra and Abdul Rahim Ridzuan. 2005. Tamil language instruction in Singapore - A preliminary report on findings of classroom pedagogical practices. Presented at TLCPRC meeting at Ministry of Education 25 May, Singapore, Centre for Research in Pedagogy and Practice, National Institute of Education, Nanyang Technological University.

Stinson, M. 2005. Dramactive Book 2. Sydney, McGraw-Hill.

Stinson, M., & Wall, D. 2003. Dramactive Book 1. Sydney, McGraw-Hill.

A task-based approach: Activities, materials, group dynamics. The steps of the lesson... Website: Retrieved on 27,9,2009. <http://www.educ.ar/educar/A%20task-based%20approach.html?uri=urn:kbee:36121900-4b43-11dc->

Richards, Jack C., 2001. Approaches and methods in language teaching. USA, Cambridge University Press.

தமிழரின் அறிவியல் சிந்தனையில் வானவியல்

க. தமிழ் அழகன்

மனிதன் சென்ற காலத்தில் திரட்டிய செய்திகளை நிகழ்காலத்தில் நடைமுறைப்படுத்தி எதிர்காலத்தை நோக்கிச் சிந்தித்துத் திட்டமிடுவது தமிழரின் அறிவியல் சிந்தனைகள். எதிர்கால நிலையில் வானவியல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஊகிப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழர் அறிவியல்

மண்ணில் மனிதனின் காலடிகள் பட்ட காலம் முதல் விண்ணில் அவன் கால் வைத்த இன்றைய காலம் வரை இம்மண்ணில் மனிதன் தனக்காக உருவாக்கிய யாவுமே அறிவியலால் வந்தவைதான். அறிவியல் மனிதனின் நம்பிக்கை. அதுவே மனித வாழ்க்கையை மேம்படுத்தியிருக்கிறது. அறிவியல் இல்லாமல் மனிதருக்கு வாழ்க்கை இருக்க முடியாது. இன்று நவீனக் கருவிகளைக் கையகப்படுத்திக் கொண்டு வாழ்கின்ற மனிதன் நேற்றைய மனிதனைக் கேலி செய்ய முடியாது.

நேற்றைய மனிதன் நேற்றைய வாழ்க்கைக்குத் தேவையான அறிவியலைப் பெற்றிருந்தான். நேற்று என்பது தொடக்கம், முடிவல்ல. எனவே நேற்று தொடங்கிய அறிவியல்தான் இன்று வளர்ந்திருக்கிறது. இதைவிட அற்புதமான அறிவியல் வளர்ச்சி நாளை வரலாம். சங்ககாலத் தமிழரிடம் அறிவியல் இருந்ததைச் சங்ககால இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம் மற்றும் சங்கஇலக்கிய நூல்களை ஆய்வு செய்து பார்க்கின்றபோது பழந்தமிழர் வாழ்க்கையில் அறிவியல் ஆழமாய் இருந்ததைத் தெளிவாக அறியமுடிகிறது. அவர்களின் பொதுவான சிந்தனைகூட உலகத்தை ஒட்டியே இருந்திருக்கின்றது. ஆகவே தமிழரின் அறிவியலை இன்றைக்கும் புறக்கணிக்க முடியாது.

தமிழரின் அறிவியல் ஒவ்வொரு தமிழரும் தெரிந்து கொள்ள வேண்டியதாகும். அவ்வாறு தமிழர் அறிவியலைத் தெரிந்து கொண்டால் உலகமயமாக்கல் என்ற போர்வையில் வருகிற அந்நியப்பண்பாட்டு

ஊடுருவல்களை எதிர்கொண்டு நமது தனித்துவ அடையாளங்களைத் தற்காத்துக் கொள்ள முடியும். தமிழரின் அறிவியல் என்பது தமிழரின் மரபுகளைப் புரிந்துகொள்ள உதவும் பாடமாகும்.

வானவியல்

சூரியனையும் சந்திரனையும் மனிதன் ஆதிவாசியாக வாழ்ந்த பொழுது அறிய முற்பட்டபோதே வானவியல் அறிவியல் தோன்றிவிட்டது. உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளில் மிகத்தொன்மையானது, பழமையானது வானவியல் கல்வி ஆகும். அது இன்றும் மிக விரைவான முன்னேற்றப் பாதையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

வானவியல் ஆய்வில் சீனா மற்றும் மெசபடோமியா ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றொடு பேசுவதற்குச் சான்றுகளாய் இருந்த தமிழரின் வானவியல் அழிந்துபோயின. ஆனாலும் இன்றைக்கு இருக்கிற தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் போன்ற நூல்களில் காணப்படுகிற வானவியல் அறிவு சம்பந்தமான குறிப்புகள் தமிழர்கள் தொல்காலத்திலிருந்து வானவியல் கல்வி கொண்டவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

உலகம் என்பது நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது என்றும் இது இயற்கையின் பாற்பட்டது என்றும் தொல்காப்பியம்,

நிலம் தீ நீர், வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின் (தொல். 635 பொருள்.)

என்ற நூற்பாவில் சொல்கிறது. இது போன்ற குறிப்பை,

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல் (புறம். 2)

என்ற பாடலில் காணலாம். எனவே, பழந்தமிழருக்கு மிகத் தெளிவான வானவியல் அறிவியல் தெரிந்திருக்கிறது என்பது உறுதியாகிறது.

அண்டவெளியில் சுற்றும் இந்த உலகம் பற்றிய அறிவியலும் தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. உலகத்தின் சுழற்சி, அது எவ்வாறு உருவானது பற்றியெல்லாம்

ஆய்வு செய்த மேனாட்டவர் 15 ஆம் நூற்றாண்டிற்கு முன்புவரை உலகம் தட்டையானது என்றே நம்பி வந்தார்கள். 15 ஆம் நூற்றாண்டில் தான் (கி.பி. 1400) போலந்து நாட்டு நிக்கோலஸ்கிராப்ஸ், என்பவர் உலகம் தட்டை அல்ல. உருண்டை வடிவமானது என்று சரியாகக் கணித்துச் சொன்னார். ஆனால் அதனை எவரும் நம்பவில்லை. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கலிலியோ (1564–1642) உலகம் உருண்டை என விளக்கினார், அதற்கான காரணங்களை அடுக்கினார். உலகம் நம்பியது. ஆனால் மேனாட்டில் உலகம் தட்டையானது என்று சொல்வதற்கு முன்பே உலகம் உருண்டை வடிவமானது எனச் சொல்லியது ஒரு தமிழ்க்குரல். அந்தக் குரலுக்கு உரியவர் திருவள்ளுவர் ஆவார்.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள். 1031)

